# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 127 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை (16.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 21, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...

தேர்தலுக்கு பயமில்ல.. ஆனா மக்கள் முன்னால் போறதுக்கு பயம் போல..!



## உஷ்



கொழும்பில் கடந்தவாரம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் ஹிருணிக்கா பிரேமசந்திரவுக்கு உரையாற்ற இடமளிக்கப்படாமை அக்கட்சிக்குள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாம்.

ஜனாதிபதி ரணிலை விமர்சித்து அவர் கருத்துகளை வெளியிடுவார் என்பதால் அவருக்கு உரையாற்ற இடமளிக்க வேண்டாமென கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் வலியுறுத்தினராம். இதனால் ஹிருணிக்கா கடும் விசனமடைந்துள்ளதாக தகவல்.

# 13ஆம் திருத்தத்துக்கு முஸ்லிம்கள் அஞ்சும் நிலையில் வடக்கு - கிழக்கு இணைய வேண்டுமா, இல்லையா?

### முஸ்லிம் தலைமைகள் தெளிவுபடுத்த வேண்டுமென்கிறார் அமைச்சர் நஸீர் அஹமட்



வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்து 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக் கோரும் தமிழ்த் தலைமைகளும் இதே நிலைப்பாட்டிலுள்ள முஸ்லிம் தலைமையும் இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கான அதிகாரப்பகிர்வு என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென சுற்றாடல் துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட கூட்டத்தின்போது அரசியலமைப்பின் 13ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரியதையடுத்தே, அமைச்சர் நஸீர் அஹமட் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இதில் நாங்கள் கரிசனையுடன் உள்ளோம்.

02 பக்கம்

# 13ஆம் திருத்தமே சரியான அணுகுமுறை

### அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



•நமது நிருபர்

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதே சரியான அணுகுமுறையாக இருக்கும் என்று தெரிவித்துள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, தற்போது உருவாகியுள்ள இந்தச் சூழலை அனைத்து தரப்புகளும் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

02 பக்கம்

# தேர்தல் வேண்டாம்!



### ஆளுங்கட்சி உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள் ரணிலிடம் கோரிக்கை

•நமது நிருபர்

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அல்ல, எந்தவொரு தேர்தலுக்கும் இப்போதைக்கு செல்லவேண்டாமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வசமுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் திட்டவட்டமாக தெரிவித்திருப்பதாக அறியமுடிகின்றது.

பொதுஜன பெரமுன வசமுள்ள மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாக முக்கியஸ்தர்களை ஜனாதிபதி ரணில் நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்துப் பேசியுள்ளார். உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்தினால் இன்றைய நிலைமையில் ஆளுங்கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்படுமென இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணிலிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

02 பக்கம்

# விமான நிலையங்களால் ரூ. 200 கோடி நட்டம்

•ம. சுசிகலா

இரத்மலானை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்கள் கடந்த நான்கு வருடங்களில் இருநூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான பாரிய நட்டத்தைச் சந்தித்துள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கொழும்பு இரத்மலானை சர்வதேச விமான நிலையம் தொடர்ச்சியாக நட்டத்தை சந்தித்து வருவதாகவும், 2017ஆம் ஆண்டுமுதல் 2021ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் விமான நிலையத்தின் இழப்பு 169 கோடி ரூபாவுக்கும் அதிகமெனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை விமான நிலையத்திற்கு கடந்த வருடம் மாத்திரம் 46 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில்...

02 பக்கம்

### குத்துச்சண்டை வீரரை

# தீவைத்து எரித்த கும்பல்

### கண்டி பாழடைந்த பகுதியில் கொடூரம்



•த. யுவராஜ்

கண்டியில் பிரபல குத்துச்சண்டை வீரரான தினுஷ லக்ஷான் என்பவரை திட்டமிட்ட குற்றவாளிகள் கும்பலொன்று கடத்திச்சென்று அவரை தாக்கி எரித்துள்ளதுடன், அவர் கவலைக்கிடமான நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார்சைக்கிள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பேசுவதற்கு கண்டி வைத்தியசாலை வீதியிலுள்ள தனது வீட்டிலிருந்து தனது மகன் சென்றிருந்தபோது, அந்த வீதியின்...

02 பக்கம்

### வெற் வரி திருத்தச் சட்டம்

# சபாநாயகரால் சான்றுரைப்பு



பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தையிட்டு நேற்று முன்தினம் (14) சான்றுரைப்படுத்தினார்.

பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலம் கடந்த 09ஆம் திகதி திருத்தங்களுடன் மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

02 பக்கம்

# டயனாவுக்கு பயணத்தடை

### ஐந்து நாட்களுக்கு நீக்கம்



•நா.தினுஷா

குடிவரவு-குடியகல்வு சட்டத்தை மீறி கடவுச்சீட்டு தயாரித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை தளர்த்தி, ஐந்து நாட்களுக்கு வெளிநாடு செல்ல கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க நேற்று (15) அனுமதியளித்துள்ளார்.

டயனா கமகே சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன, தனது வாடிக்கையாளருக்கு சிங்கப்பூர் மற்றும்...

02 பக்கம்

# சமரசப் பேச்சின் பின்னரே தேர்தல் குறித்து தீர்மானம்

### பங்காளிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



•யாழ். செய்தியாளர்

"தேர்தலில் தனித்தனியாக போட்டியிடுவது குறித்து பங்காளிக்கட்சியுடன் இணைந்து சமரசமாக பேசித்தான் முடிவெடுப்போமே தவிர, தனித்து தீர்மானத்தை எடுப்போமெனக் கூறவில்லை'' - என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இல்லாமல், தனித்தனியாக தேர்தல்களை எதிர்கொள்வதாக...

02 பக்கம்

# மருத்துவர்களின் ஓய்வு வயதை திருத்தியது அரசு

### விசேட வர்த்தமானி வெளியீடு



•ம. சுசிகலா

மருத்துவ ஆலோசகர்கள், அரச வைத்திய அதிகாரிகள், பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் மற்றும் அரசாங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளின் ஓய்வு வயதை திருத்தியமைக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் உள்ளிட்ட பொதுத்துறை ஊழியர்களுக்கு 60 வயது நிறைவடைந்தவுடன் கட்டாயம் ஓய்வு அளிக்கும் வகையில் கடந்த டிசம்பர் மாதம்...

02 பக்கம்

# மார்ச்சில் நீண்ட நேர மின்வெட்டு அமுலாகும்

### பொறியியலாளர்கள் கடும் எச்சரிக்கை



•ம. சுசிகலா

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் இலங்கை நீண்ட நேர மின்வெட்டுக்கு உள்ளாகும் அபாயம் காணப்படுவதாக மின்சார பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# வெகுஜன ஊடகங்கள் எதிர்நோக்கும் சவால்கள்

### தேசிய பேரவை உப குழுவில் ஊடகவியலாளர்கள் விளக்கம்



பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் வெகுஜன ஊடகங்களை நடத்திச்செல்வதில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியிருப்பதாக நாடாளுமன்றத்தில் நேற்று (15) நடைபெற்ற பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால...

02 பக்கம்

# மின்சாரத்துறை மறுசீரமைப்புக்கு விசேட செயலகம் உருவாக்கம்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிப்பு



மின்சாரத்துறை மறுசீரமைப்புத் தொடர்பான முன்மொழிவு பூரணப்படுத்தப்படும் வரை மறுசீரமைப்புத் தொடர்பான செயலகம் ஒன்று இயங்க வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர வலியுறுத்தியுள்ளார்.

மின்சாரத்துறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை குறித்து குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்காக தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் கூடிய இக்கூட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர்களான டி.வி.சானக, இந்திக அநுருத்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா தேவி வன்னியாரச்சி, அசங்க நவரத்ன, சாகர காரியவசம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மின்சாரத்துறையில் மேற்கொள்ளவேண்டிய மறுசீரமைப்புக் குறித்த முன்மொழிவுகள் பற்றி அதிகாரிகள் குழுவுக்கு விளக்கமளித்தனர். இலங்கை மின்சார சபையின் வினைத்திறனை அதிகரிப்பது மற்றும் ஒழுங்குறுத்துகைப் பணியை உறுதிப்படுத்தும் நோக்கில் ஐந்து சுயாதீன நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டிருப்பதாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினரால் குழுவுக்கு விளக்கமளிக்கப்பட்டது. மின்சார சபையை தனியார் மயப்படுத்தும் எந்த முன்மொழிவுகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

மறுசீரமைப்பின் போது, மின்சார உற்பத்தி உள்ளிட்ட விடயங்களில் ஈடுபடும் தரப்பினர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை இலகுபடுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

மின்சாரத்துறை மாத்திரமன்றி ஏனைய துறைகள் தொடர்பிலும் கொள்கைத் தயாரிப்புக்கென தனியான நிறுவனமொன்றை அமைப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும், அதற்கமைய நாடாளுமன்றத்தின் ஊடாக உரிய சட்ட மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய சபைக்கு முன்மொழியவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மின்சாரத்துறை மறுசீரமைப்புத் தொடர்பான முன்மொழிவு பூரணப்படுத்தப்படும்வரை மறுசீரமைப்புத் தொடர்பான செயலகம் ஒன்று இயங்க வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜயசேகர வலியுறுத்தினார்.

அத்துடன், மின்சாரத்துறை மாத்திரமன்றி சகல துறைகளிலும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு யார் பொறுப்பு, பொறுப்பாக நடந்துகொள்ளாதவர்களுக்கு என்ன தண்டனை என்பது உறுதியாக ஓரிடத்திலும் குறிப்பிடப்படவில்லை எனக் குழுவின் தலைவர் தெரிவித்தார். தேர்தலில் அரசியல்வாதிகளை அகற்றுவதற்கு மக்களுக்கு அதிகாரம் இருந்தாலும், தேவையான செயல்திறன் அளவைக் காட்டாத அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிட்ட கொள்கைகள் எதுவும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதே பிரச்சினையை மின்துறையிலும் காணமுடியும் என்பதால், இந்நிலையை மாற்ற வேண்டியதன் அவசியம் இங்கு வலுவாக வலியுறுத்தப்பட்டது.

***நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் சகோதர மொழி சிங்களப் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிய பத்திகளின் தொகுப்புகளை உள்ளடக்கிய 'Beyond Common Narratives' எனும் தலைப்பிலமைந்த ஆங்கில மொழியிலான நூலின் முதற்பிரதியை இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச்.சைத்திடம் அண்மையில் (13) கையளித்தார்.***



# குத்தகை வளவுகளின் உடைமையை மீளப்பெறும் சட்டமூலத்திற்கு ஆலோசனைக் குழுவில் அனுமதி

குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலத்துக்கு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அதன் தலைவர் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் (13) நாடாளுமன்றத்தில் கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

அதேபோன்று, புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய உரிய திருத்தங்களை சட்டமூலத்தில் உள்வாங்கியுள்ளதாக அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அதற்கமைய, இந்தச் சட்டமூலம் தொடர்பில் மேலும் ஆராய்ந்து அடுத்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கருத்திற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான உதயன கிரிந்திகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தேர்தல் வேண்டாம்...

அவ்வாறான பின்னடைவு ஏற்பட்டு உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப்பாடு இல்லாமல் போகுமாயின் அடுத்து வரும் எந்த தேர்தலிலும் கிராமிய மட்டத்திலான ஆதரவு கிடைக்காமல் போகுமென்றும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, நாட்டின் பொருளாதார நிலைமை சீராகும் வரை தேர்தலுக்கு செல்லாமல் இருப்பதே சிறந்ததென உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறியுள்ளனர்.

இன்றைய நிலையில் கிராமிய மட்டத்தில் தேசிய மக்கள் சக்தி, மக்களிடம் கூடுதலான செல்வாக்கு பெற்றுள்ளதாகவும், ஐக்கிய மக்கள் சக்தி அதற்கு அடுத்த நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்தாலும் கூட சவாலை எதிர்நோக்க வருமென விவரித்துள்ளதாக தெரியவந்தது.

## டயனாவுக்கு பயணத்தடை...

ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால், ஐந்து நாட்களுக்கு வெளிநாட்டுப் பயணத்தடையை தளர்த்துமாறு கோரியிருந்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி, டயனா கமகேவின் வெளிநாட்டு பயணத்தடையை எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையிலும், எதிர்வரும் டிசம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கும் நீக்குமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## குத்துச்சண்டை வீரரை...

சந்திக்கு குறித்த கும்பலால் அழைத்துச் செல்லப்பட்டதாக தினுஷ லக்ஷனின் தாய் தெரிவித்துள்ளார்.

இதன்போது, அவர்கள் சந்திக்கு சென்றபோது, இரண்டு முச்சக்கரவண்டிகளில் வந்த குறித்த கும்பல் தனது மகனை தாக்கி அவரை கடத்திச் சென்றதாக அவர் கூறினார்.

இந்நிலையில், தினுஷ லக்ஷன் தீக்காயங்கள் மற்றும் வெட்டுக்காயங்களுடன் கண்டியின் விளையாட்டு மைதானம் ஒன்றுக்கு அருகில் உள்ள பாழடைந்த பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து அவர் கண்டி பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருவதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெற் வரி திருத்த சட்டம்...

இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 82 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

இதற்கமைய பெறுமதிசேர் (திருத்தச்) சட்டமூலம் 2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமாக 2022ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

## விமான நிலையங்களால்...

வருடத்திற்கு 13 விமானங்கள் இயக்கப்படுவதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், தணிக்கை அறிக்கையின்படி, பயணிகள் நடமாட்டம் முறையே 60 மற்றும் 28 ஆக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 13ஆம் திருத்தத்துக்கு...

ஆனால், இத்தீர்வுகள் முஸ்லிம் சமூகத்துக்குப் பிரச்சினையாகிவிடக்கூடாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டி கோரும் தரப்புகள், இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கு வழங்கும் அதிகாரம் என்ன? இதுபற்றி அவர்கள் மனம் திறப்பது அவசியம். சூழ்நிலையைச் சமாளிக்கும் அறிக்கைகள் விடாமல், முஸ்லிம்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு பேசுவதே சிறந்தது.

இதே நிலைப்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை உள்ளமை ஏற்புடையதல்ல. வடக்கு கிழக்கு இணைய வேண்டுமா அல்லது வடக்கும் கிழக்கும் வெவ்வேறாக பிரிந்திருக்க வேண்டுமா என்பதை முஸ்லிம் காங்கிரஸ் தலைமை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும். இணைய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் ஹக்கீம் இருப்பாரேயானால்,வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு வழங்கப்போகும் அரசியல் தீர்வை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பில், ஹக்கீமுக்கும் சுமந்திரனுக்கும் இதுவரை காலமும் இரகசியமாக நடாத்தப்பட்ட பேச்சுகள் வெளிக்கொணரப்படுவது அவசியம். இவ்விரு மாகாணங்களும் பிரிந்திருக்க வேண்டுமென ஹக்கீம் கூறினால், அவ்வந்த மாகாணங்களில் அபகரிக்கப்பட்ட, கையகப்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

சிறுபான்மைச் சமூகங்கள் என்ற பொது அடையாளத்துக்குள் முஸ்லிம்களையும் உள்ளீர்க்கவே முயற்சிக்கப்படுகிறது. இப்பொது அடையாளத்துக்குள்ளும் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே, 13 ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுவது கள நிலைவரங்களுக்குப் பொருந்தாது. இது அவரது தனிப்பட்ட விருப்பமே தவிர வடக்கு,கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷை இல்லை. எனவே, தீர்வு தொடர்பில் எவரும் எழுமாந்தமாகப் பேசக்கூடாது.

வடக்கும் கிழக்கும் பிரிந்த மாகாணங்களாகவே இருப்பதானால், குறிப்பாக கிழக்கில் அபகரிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை, முஸ்லிம் பிரதேச செயலகங்களிடமோ அல்லது முஸ்லிம்களிடமோ ஒப்படைப்பது அவசியம். உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்கள் உள்ளன. அவற்றில் 04 முஸ்லிம் பிரதேச செயலங்களில் 27 வீதமாக உள்ள முஸ்லிம்களுக்கு 1.3 வீதமான காணிகளே உள்ளன. அதிகாரக் கெடுபிடிகள் மற்றும் அச்சுறுத்தல்களாலே இவர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன, கபடத்தனமாக பறிக்கப்பட்டன. மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர், அபகரிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்படுவது அவசியம். அது மட்டுமல்ல, காணிகளின் எல்லைப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்ட பின்னரே வடகிழக்கில் முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாகினர். கிழக்கில் காணிகள் அபகரிக்கப்பட்டன.

மட்டக்களப்பில் முஸ்லிம்களின் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டன. இதனால்தான் 13ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இவ்விடயத்தில் கடைப்பிடிக்கும் மௌனமும் கலைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்

## சமரசப் பேச்சின் பின்னரே...

தீர்மானிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரனிடம் கேட்டபோதே அவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசு கட்சி தனியாக போட்டிடுவது என்பது, தமிழரசு கட்சியின் தனி முடிவல்ல, தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளுடன் இணைந்துதான் இந்த முடிவை எடுக்க உள்ளோம்.

தற்போது உள்ள தேர்தல் முறையின் அடிப்படையில் நாங்கள் போட்டியிடுவோமாக இருந்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கின்ற மூன்று கட்சிகளும் தனித்தனியே போட்டியிடுவதாக இருந்தால் கூடுதலான ஆசனத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது.

சில சபைகளில் அவ்வாறு போட்டிடுவதால் ஆசனங்கள் கூடும் என கூற முடியாது. ஆனால் சில இடங்களில் கூறலாம். சில இடங்களில் குறையலாம். நாங்கள் பலமாக இருக்கின்ற பிரதேசங்களில் போட்டியிட்டால், எல்லா வட்டாரத்தையும் ஒரே கட்சி வெல்லுமாக இருந்தால் மட்டுமே விகிதாசாரத்தில் வருகின்ற ஆசனத்தை பெற்றுக் கொள்ள முடியும். ஒரே கட்சியாக போட்டியிட்டால் வட்டாரங்களில் கூடுதலாக வென்றால் விகிதாசார முறையில் நமக்கு ஆசனங்கள் கிடைக்காது.

இந்த கணக்கினை அடிப்படையாக வைத்து தான் ஒரு தொழில்நுட்ப ரீதியாக நாங்கள் இதனை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றோம். இது சம்பந்தமாக பங்காளிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதனுடனும் சித்தார்த்தனுடனும் பேசியிருக்கின்றேன்.

எனவே. அவர்களுடன் பேசித்தான் இந்த நாங்கள் விடயத்தை அறிவித்திருந்தோம்.

ஆனால் நாங்கள் இறுதி முடிவெடுக்கவில்லை. ஒவ்வொரு பிரதேசத்திலும், ஒவ்வொரு சபையிலும் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை வைத்து நாங்கள் அந்த முடிவை எடுப்போம்.

சில வேளைகளில் சில இடங்களில் சேர்ந்து போட்டியிடலாம். சில இடங்களில் தனித்தனியே போட்டிடலாம். எனவே அந்தந்த சூழ்நிலைக்கேற்றவாறு தொழில்துறை ரீதியாக அந்த தீர்மானங்கள் எடுக்கப்படும்.

பங்காளிக் கட்சியுடன் இணைந்து அவர்களுடன் சமரசமாக பேசித்தான் இந்த முடிவை எடுப்போமே தவிர நாங்கள் தமிழரசு கட்சியே தனித்து தீர்மானத்தை எடுப்போம் என நாங்கள் கூறவில்லை. பங்காளி கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேசித்தான் முடிவை எடுப்போம் எனத் தெரிவித்தார்

## மருத்துவர்களின் ஓய்வு...

6ஆம் திகதி, சிறப்பு வர்த்தமானி அறிவிப்பை அரசு வெளியிட்டிருந்தது.

எவ்வாறாயினும், பொது நிர்வாக அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் திகதி வெளியிடப்பட்ட புதிய வர்த்தமானியில் அரசாங்க வைத்தியர்கள் தொடர்பான ஏற்பாடுகள் திருத்தப்பட்டுள்ளன.

மருத்துவ ஆலோசகர்கள் அரச மருத்துவ அலுவலர்கள் பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் அரசாங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அலுவலர்கள் ஆகிய பதவிகளின் கட்டாய ஓய்வுக்கான வயது வரம்பு பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

(அ) ஏற்கனவே 63 வயதை நிறைவு செய்துள்ள மருத்துவ அதிகாரிகளை 31 டிசம்பர் 2022க்கு முன் ஓய்வுபெற அனுப்புதல்.

(ஆ) ஏற்கனவே 62 வயதை பூர்த்திசெய்த மருத்துவ அதிகாரிகளை 63 வயது முடிந்தவுடன் ஓய்வு வழங்குதல்.

(உ) ஏற்கனவே 61 வயதை பூர்த்திசெய்த மருத்துவ அதிகாரிகளை 62 வயது முடிந்தவுடன் ஓய்வு வழங்குதல்.

(ஈ) ஏற்கனவே 60 வயதை பூர்த்திசெய்த மருத்துவ அதிகாரிகளை 61 வயது முடிந்தவுடன் ஓய்வு வழங்குதல்.

(இ) ஏற்கனவே 59 வயதை பூர்த்திசெய்துள்ள மருத்துவ அதிகாரிகளை 60 வயது முடிந்தவுடன் ஓய்வு வழங்குதல்.

எவ்வாறாயினும், ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பிறந்த நாளைக் கொண்ட மருத்துவ ஆலோசகர்கள், அரசு மருத்துவ அலுவலர்கள், பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் மற்றும் அரசாங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அலுவலர்கள் ஓய்வுபெற அறிவித்த ஆண்டில் ஜூன் 30ஆம் திகதிவரை பணியாற்ற வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

ஜூலை 1 முதல் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் பிறந்த நாளைக் கொண்ட மருத்துவ ஆலோசகர்கள், அரசு மருத்துவ அலுவலர்கள், பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் மற்றும் அரசாங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அலுவலர்களின் ஓய்வுபெற அறிவிக்கப்பட்ட ஆண்டில் டிசம்பர் 31ஆம் திகதிவரை பணியாற்ற வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் - என குறித்த வர்த்தமானியில் திருத்தப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மார்ச்சில் நீண்ட நேர...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களின் தற்போதைய நீர் மட்டம் 75 சதவீதமென கணிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்தமையினால் எதிர்காலத்தில் நீர்மட்டம் குறைவடைவதற்கான வாய்ப்புகள் உள்ளதால் இது, எதிர்காலத்தில் மின்சார உற்பத்திக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும், நுரைச்சோலை லக்விஜய மின் நிலையத்தை இயக்குவதற்கு குறைந்தது 38 நிலக்கரி கப்பல்கள் தேவைப்படுவதுடன், தற்போது நிலக்கரியை தாங்கிய 5ஆவது கப்பலே நாட்டை வந்தடைந்துள்ளது. அது நிறைவடைந்தால் அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாடு இருளில் மூழ்கக் கூடும். தற்போதைய சூழலில் நிலக்கரியுடனான 24 கப்பல்கள் நாட்டை வந்தடைந்திருக்க வேண்டும்.

எனினும், அதனை அரசாங்கம் தவறவிட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் கடும் மின்சார நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும்.

எவ்வாறாயினும் நுரைச்சோலை லக்விஜய அனல்மின் நிலையம் தற்போது அதன் முழு கொள்ளளவில் 45 மட்டுமே மின் உற்பத்தி செய்கிறது. கோரியபடி தேவையான நிலக்கரி கிடைக்காவிட்டால், திட்டமிடப்பட்ட நீண்டகால மின்வெட்டு அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## 13 ஆம் திருத்தமே...

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் குறித்த விடயம் மீண்டுமொரு முறை வலியுறுத்தப்பட்டது.

மேலும், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கிடைத்த பல்வேறு சந்தர்ப்பங்களை தமிழ் தரப்புக்கள் தவறவிட்டிருப்பதாகவும், சந்தர்ப்பங்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமாயின் எமது மக்கள் எதிர்கொண்ட பேரழிவுகளை தவிர்த்திருக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த 45 வருடங்களாக தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளுடன் சம்மந்தப்பட்டவன் என்ற வகையில், குறித்த விடயங்களை பிரஸ்தாபிப்பதற்கான உரிமை தனக்கு இருப்பதாகவும் தெரிவித்தார். அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இரா. சம்பந்தன் தெரிவித்த கருத்தை 1987, இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரையில் நானும் ஏற்றுக்கொள்கின்றேன்.

அதற்கு பின்னர் உருவாகிய அரசாங்கங்களின் செயற்பாடுகளில் குணாம்ச ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

அதன் காரணமாகவே, தேசிய நீரோட்டத்தில் இணைந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தை பயன்படுத்தி தேசிய நல்லிணக்கத்தின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையுடன் ஈ.பி.டி.பி. செயற்பட்டு வருகின்றது.

அன்றிலிருந்து தொடர்ச்சியாக, 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதே, சரியான வழிமுறை என்பதையும் வலியுறுத்தி வருகின்றோம்.

தற்போதைய சூழலில், புதிய அரசியலமைப்பு என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

ஆனால், 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு ஏற்ற மனோநிலையிலேயே பெரும்பாலானவர்கள் இருப்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று சக நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் போன்றவர்களும் இப்போது இதே நிலைப்பாட்டையே தெரிவித்திருக்கின்றனர்.

எனவே, உருவாகியுள்ள சூழலை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

## வெகுஜன ஊடகங்கள்...

நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுக் கூட்டத்தில் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பொருளாதார சவால்களுக்கு மத்தியில் வெகுஜன ஊடக நிறுவனங்களில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ பட்டாலி சம்பிக ரணவக்க தலைமையில் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு நேற்று (15) நாடாளுமன்றத்தில் கூடியது. இதன்போதே இவ்விடயம் புலப்பட்டது.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை உள்ளிட்ட சம்பிரதாயபூர்வமான ஊடக நிறுவனங்கள், இணைய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தயாரிப்புக்கான செலவுகள் அதிகரித்திருப்பதால் விளம்பரங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் ஏறத்தாழ 70 வீத வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக இங்கு தெரியவந்தது.

இரவு நேரங்களில் இடம்பெறுகின்ற மின்சாரத் துண்டிப்புகள் காரணமாக தொலைக்காட்சிகளுக்குக் கிடைக்கும் விளம்பரங்களின் அளவு குறைந்திருப்பதாகவும், தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் நிகழ்ச்சியொன்றைத் தயாரிப்பதற்காக அதிக செலவு ஏற்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

காகிதத் தட்டுப்பாடு உள்ளிட்ட உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளமையினால் நாளேடுகள் உட்பட வெளியீட்டுத் துறையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக பத்திரிகைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினர். இந்நிலைமையினால் நாளேடுகளின் பக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். நாளேடுகளில் பக்கங்கள் குறைக்கப்படுவதால் பிராந்திய ஊடகவியலாளர்களின் செய்திகளுக்கு இடமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

சில பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரியும் நிரந்தர ஊழியர்களுக்குக் கூட சம்பளம் வழங்குவதில் சிரமமான நிலை காணப்படுவதாகவும் இங்கு தெரியவந்தது. இந்நிலையில் நாளேடுகள் அச்சிடுவது 60-70 வீதம்வரை குறைந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கமைய பொருளாதார பிரச்சினைகள், உள்ளூர் செய்திகளை வெளியிடாமை போன்ற காரணங்களால் மக்களிடையே நாளேடுகளின் பயன்பாடு வெகுவாகக் குறைந்துள்ளதாக பத்திரிகை ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

பொருளாதார நெருக்கடிக்கு மேலதிகமாக, சமூக ஊடகங்கள் உள்ளிட்ட தற்போதைய டிஜிட்டல் ஊடகப் போக்குகளினால் நாளேடு மற்றும் வானொலி போன்ற பாரம்பரிய ஊடகங்கள் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளமை குறித்தும் இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய நெருக்கடி நிலையை எதிர்கொள்ள மக்களை தயார்படுத்துவதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் இணைந்து ஒரு இலக்கை அடைய அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும் எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. சுனாமி அனர்த்தம், பயங்கரவாதத்தைத் தோற்கடித்தல், கொவிட் நெருக்கடி போன்ற நிலைமைகளைச் சமாளிப்பதற்கு ஊடகங்கள் எவ்வாறு செயற்பட்டிருந்தனவோ, அதேபோன்று செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு முன்வைக்கப்பட்ட கருத்துகள் மற்றும் முன்மொழிவுகள் குறித்துக் கவனம் செலுத்திய உப குழுவின் தலைவர், ஊடகங்கள் குறித்த முன்மொழிவுகளை அடுத்த அறிக்கையில் உள்ளடக்கி அதனை தேசிய பேரவையில் முன்வைப்பதாகத் தெரிவித்தார்.

# மக்கள் சேவையை நிறைவேற்றத் தவறியமைக்காக அரச உத்தியோகத்தர்கள் காரணங்களை முன்வைக்கக்கூடாது

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்







அரச நிறுவனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை உருவாக்காத வகையில் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையைப் பெற்றுக்கொடுப்பது அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பாகுமென வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுமக்கள் சேவையை நிறைவேற்றத் தவறியமைக்காக அரச உத்தியோகத்தர்கள் ஒருபோதும் காரணங்களை முன்வைக்கக்கூடாதென்றும் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே சட்டங்கள் மற்றும் சட்டக்கோவைகளை கேடயமாகப் பயன் படுத்த வேண்டுமே தவிர, நிறுவனங்களில் பணியாற்றுவதற்காக அல்ல என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பதுளை மாவட்ட செயலகத்தில் நேற்று (15) முற்பகல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத் திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கை யிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

இப்பகுதிகளிலுள்ள பைனஸ் மரங்களை அகற்றுவதற்கு முன்னர் அது தொடர்பிலான விஞ்ஞானபூர்வமான அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். ஆங்கிலே யர்கள் இந்நாட்டை ஆட்சிசெய்த காலத்தில் பைனஸ் பயிர்ச்செய்கை இருக்கும்போதே தான் தேயிலையையும் பயிரிட்டனர். எனவே, தவறான கருத்துகளில் மாட்டிக்கொள்ளாதீர்கள். இதனால் பைனஸ் பயிர்ச்செய்கையை அகற்றுவதற்கு முன்னர் இது நீரேந்துப் பிரதேசங்களைப் பாதிக்கிறதா என்பது தொடர்பில் விஞ்ஞானபூர்வமாக ஆராய்தல் வேண்டும்.

பைனஸ் பயிர்ச்செய்கையை நீக்கிவிட்டு டர்பன்டைன் பயிர்ச்செய்கையில் எதற்காக ஈடுபட்டீர்கள். டர்பைன்டைன் பயிர்ச்செய்கைக் காரணமாக நீரேந்துப் பிரதேசங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக இருந்தால் அப்பயிர்ச்செய்கையை நீக்கிவிடுங்கள்.

அரச அதிகாரிகள் திறமையாக செயல்பட வேண்டும். எனக்கு காரணங்கள் தேவையில்லை. அரச திணைக்களங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட வழியில்லை. அரசாங்கம் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து பொதுமக்களுக்கு சேவை செய்யவேண்டும்.

பெருந்தோட்டத் துறையில் சில அதிகாரிகள் சட்டக்கோவைகளை கேடயமாக வைத்துக்கொண்டு செயற்படுகின்றனர். 80களில் இந்தச் சட்டத்தை தயாரிக்கும்போது இது குறித்து நான் கவனம் செலுத்தினேன்.

இப்பிரதேசத்திலுள்ள கல்வி தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய போது, ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக குறிப்பிடப்பட்டது. ஆசிரியர் நியமனங்களைப் பெற்று, ஓரிரு ஆண்டுகளில் அவர்கள் இடமாற் றங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். எனவே, நியமனம் பெற்று ஐந்து வருடங்களுக்கு இடமாற்றங்களை வழங்காமை தொடர்பில் கல்வியமைச்சும் மாகாண சபையும் இணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு புதிய காணிகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பான முன்மொழிவு பரிசீலிக்கப்பட்டு அதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படும்.

பதுளை மாவட்டத்தில் சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்காக மஹியங்கனை பிரதேச வைத்தியசாலையை மாவட்ட வைத்திய சாலையாக மாற்றுவதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும். அதே போன்று, கிராந்துருக்கோட்டையிலுள்ள சிறுநீரக மருத்துவமனையின் செலவுக்காக நிதியை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தியத்தலாவை ஆதார வைத்தியசாலை காரணமாக பண்டாரவளை வைத்தியசாலையின் அபிவிருத்தியில் பிரச்சினை ஏற்பட்டிருந்தால் அது தொடர்பில் நாம் ஆராய்வோம்.

பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக மாற்றுவதற்கான பணிகள் சுகாதார அமைச்சிடம் ஒப்படைக் கப்படும். அச்சந்தர்ப்பத்தில் இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

பதுளை பொது வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கு அவசியமான அனைத்து காணிகளும் தற்போது விடுவிக்கப் பட்டுள்ளன. இதன் எதிர்கால செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நமது நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டதனால், வெளி நாட்டு நன்கொடைகள் கிடைப்பது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பதுளை பொது வைத்தியசாலைக்கு அவசியமான உபகரணங்களைப் பெற்றக்கொள்வதற்கு அவசியமான பணத்தை வழங்குவதில் சற்று காலதாமதம் ஏற்படலாம்.

மேலும் இந்த வைத்தியசாலையில் சுற்றுலாப் பயணிகளுக்காக அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் நாம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். அதன்மூலம் அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் - என்றார்.

கடந்த காலங்களில் பதுளை மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் விடுபட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை மீண்டும் செயற்படுத்த வேண்டுமென இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க இங்கு கருத்து தெரிவித்தார்.

மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பில் இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே ஜனாதிபதிக்கு விளக்கமளித்ததுடன், இடது கரையின் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் அங்கு சுட்டிக்காட்டினார்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஹரீன் பெர்னாண்டோ, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான சாமர சம்பத் தசநாயக்க, தேனுக விதானகமகே, அரவிந்த குமார், நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சுரேன் பட்டகொட மற்றும் மாவட்ட அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## யாழில் மஞ்சளுடன் கைதானவர்களுக்கு ஒரு இலட்சம் தண்டம் – பொருள் அரசுடமை




யாழ்ப்பாணத்தில் மஞ்சளுடன் கைதான இருவருக்கும் மல்லாகம் நீதவான் நீதிமன்றம் ஒரு இலட்ச ரூபா தண்டப்பணம் அறவிட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட மஞ்சளை அரசுடமையாக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில் கடந்த 2 ஆயிரத்து 448 கிலோகிராம் மஞ்சளுடன் சுதுமலை பகுதியைச் சேர்ந்த இருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து, விசாரணைகளின்போது இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் அறவிட்ட மன்று, சான்று பொருளாக மன்றில் சமர்ப்பித்த 2448 கிலோ மஞ்சளையும் அரசுடைமையாக்குமாறு உத்தரவிட்டது.

## நாய்களை விழுங்கிய முதலை மடக்கிப்பிடிப்பு



யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் இரண்டு நாய்களை உயிருடன் விழுங்கிய முதலை எட்டடி நீளமான முதலையை ஊரவர்கள் மடக்கி பிடித்துள்ளனர்.

சாவகச்சேரி சிவன் கோவிலடியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றினுள் புதன்கிழமை இரவு உட்புகுந்த சுமார் எட்டடி நீளமான முதலை, நாய்கள் இரண்டை விழுங்கி விட்டு அசையமுடியாத நிலையில் அங்கேயே உறங்கியுள்ளது.

விடுதி பணியாளர்கள் காலையில் நாய்களை காணவில்லையென தேடியபோது, விடுதி வளாகத்தில் முதலை ஒன்று உறக்கத்தில் இருப்பதைக் கண்ணுற்றுள்ளார்கள்

பின்னர் அயலவர்களின் உதவியுடன் முதலையை உயிருடன் பிடித்து மரமொன்றில் கட்டி வைத்ததுடன், அது தொடர்பில் வனவிலங்கு பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவித்ததையடுத்து, அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து முதலையை மீட்டுச் சென்றுள்ளனர்.



**உடப்பு, புளிச்சாக்குளம் பிரதான வீதியில், அண்மையில் பெய்த மழை காரணமாக பாதையில் சில இடங்களில் பாரிய குழிகள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் இந்த வீதியாகச் செல்லும் பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகளும் பாரிய சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.**

**இது நீண்டகாலமாக செப்பனிடாமல் காணப்படுவதை பலரும் அறிவர். ஆனால், இந்த வீதியை கார்பட் வீதியாக செய்தால் மட்டுமே பொதுமக்கள் பலனடைவர். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு இதனை செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.**

**(உடப்பு செய்தியாளர்)**







***கட்டாரின் தேசிய தினம் நேற்று முன்தினம் (14) கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் இலங்கைக்கான தூதுவர் ஜெஸ்மின் பின் ஜபீர் தலைமையில் நடைபெற்றது.***

***இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் கலந்துகொண்டார். அத்துடன், நினைவுதின கேக்கை அதிதிகளாகக் கலந்துகொண்ட சபாநாயகர், மகிந்த யாப்பா அபேவர்தன, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளிநாட்டமைச்சர் அலி சப்றி, விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்களும் கலந்து சிறப்பித்தனர்.***

***அத்துடன், கட்டாரில் நடைபெறுகின்ற உலக கால்பந்தாட்டப் போட்டிக்கான ரீ சேட்டும், கைப்பைகளும் பரிசாக அதிதிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அஷ்ரப் ஏ சமத்)***



**களுத்துறை மாவட்டம், மத்துகம தேர்தல் தொகுதி கந்தஹேன ஸ்ரீ அபிமங்கலாராம விகாரையின் விகாரதிபதி ஸ்ரீ பஞ்ஞானந்த தேரரின் பிறந்த தினத்தை முன்னிட்டு விகாரையில் நடைபெற்ற வைபவத்தில் மேற்படி விகாரைக்கு இன, மத பேதமின்றி நீர் விநியோகத்தை பெற்றுக்கொடுத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியாரை கௌரவித்து விகாராதிபதியினால் இன நல்லுறவுக்கான மனிதநேய கௌரவ நினைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.**

**மேற்படி நிகழ்வில் பௌத்த மதகுருமார்கள், உயர் பொலிஸ் அதிகாரிகள், மத்துகம பிரதேச செயலாளர் உட்பட இன்னும் பல புத்திஜீவிகள் மற்றும் பெருந்திரளான பௌத்த - சிங்கள மக்கள் கலந்து சிறப்பித்தனர். தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரி சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் அல்ஹாஜ் ஏ.பீ.எம்.ஸுஹைர் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.**

**(பேருவளை பி.எம்.முக்தார்)**





**தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மற்றும் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பவதாரணி இராஜசிங்கம் ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை அண்மையில் சந்தித்து, தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடினர்.**

**இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண மற்றும் கட்சியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.**


## இரத்தினபுரி கிளை “புதிய இடத்திற்கு”

**பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே,**

**வாடிக்கையாளர்களினதும் வியாபாரத்தினதும் துரித வளர்ச்சியுடன் நாம் முன்னிலும் பார்க்க சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன், 2022 டிசம்பர் 16ஆம் திகதி இன்று தொடக்கம் அதிக இடவசதியுடைய புதிய இடத்திற்கு நகர்கின்றோம் என்பதனை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**எமது புதிய முகவரி**
**இல.105, பிரதான வீதி, இரத்தினபுரி.**

**தங்களின் அனைத்து நிதித்தேவைகளுக்கும் எமது புதிய கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி,**
**முகாமைத்துவம்,**

**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி.**

**இரத்தினபுரி கிளை - தொலைபேசி : 0452 232 827**

COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, டிசம்பர் 16ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# நிலைநாட்டப்படவேண்டிய நீதி!

தீர்க்கப்பட முடியாமல் கடந்த 13 வருடங்களாக இழுபட்டுக் கொண்டிருக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கும் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை - முயற்சி - எடுக்கப்படும் என ரணில் அரசு கோடி காட்டியிருக்கின்றது.

தீர்வுக்கான பேச்சை ஒட்டி, தமிழ்த் தேசியத் தரப்புகள் தம் நிலைப்பாடு என முன்வைத்த மூன்று அம்சத்திட்டத்தில், இந்தக் காணாமலாக்கப்பட்டோர் விடயம் தனித்துவமான ஓர் அம்சமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. விரைந்து தீர்க்கப்பட முடியாதது என்று கருதியோ என்னவோ, அது தமிழ் தேசியத் தரப்புகளின் மூன்று அம்சத் திட்டத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாமல் தவறவிடப்பட்டிருந்தது.

ஆனால், கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி தலைவர்களின் கூட்டத்தில், முதலில் பேசிய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் இந்த விடயத்தை முக்கியமாகத் தொட்டுக் குறிப்பிட்டு, அதற்கும் சேர்த்து விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். அந்தப் பின்புலத்தில், அடுத்துப் பேசிய சம்பந்தன் அதனைக் கப் எனப் பிடித்துக் கொண்டார்.

''காணாமலாக்கப்பட்டோர் எல்லோரையும் நீங்கள்தானே கொன்று விட்டீர்கள். அது எமக்குத் தெரியும்'' என்று அறிவித்தன் மூலம், அவர்களை இனியும் தேடுவதில் அர்த்தமில்லை என்பதை அந்தக் கூட்டத்தில் தொட்டுக் காட்டி விட்டார் சம்பந்தன். அதனையடுத்து, காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தையும் சேர்த்து பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் தீர்வுகாண முயற்சிப்பது என்ற விடயத்தை அந்நிகழ்ச்சி திட்டத்தில் துணிச்சலுடன் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

காணாமல்போனோருக்கான அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றி, அதற்கான அலுவலகங்களை நிறுவி, காரியங்களை நகர்த்த இலங்கை அரசுகள் முயன்றனவாயினும் அவற்றை கையாளும் தரப்புகளின் தகுதி நிலைமை, நடுநிலைப்போக்கு, நியாயச் செயற்பாடு, நீதி முறைமை ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைக்காத காணாமல்போனோரின் உறவுகள் அந்த முயற்சிகளை கடுமையாக எதிர்த்து வந்தனர். அதனால் விவகாரம் முட்டுக்கட்டை நிலையில் நகராமல் தேங்கிக் கிடக்கிறது.

யுத்த காலத்தில் தமிழர் தாயகம் எங்கும் பணியாற்றிய செஞ்சிலுவை சர்வதேச குழுவின் நடுநிலைப் போக்குக் குறித்து தமிழ் மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை உண்டு. இவ்விடயத்தில் அத்தரப்பு சுயாதீனமாக செயற்பட அரசு அனுமதிக்குமானால், அத்தரப்பும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி, நியாயம் கிட்டவும், பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவும் கட்டுப்பாடின்றி உதவ முன்வருமானால், இந்த விவகாரத்தில் தீர்வை நோக்கி முன்னேற முடியும்.

இலங்கையில் காணாமற்போனோர் அலுவலக சட்டமூலமானது பாதிக்கப்பட்டோர், மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினரின் பங்கேற்பு, கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாக கூறப்பட்டது.

இருந்தபோதிலும், அது வெளிப்படைத் தன்மையற்ற முறையில் உருவாக்கப்பட்டு, அப்போதைய பிரதமரின் பணிப்புரைக்கு அமைய வர்த்தமானிப்படுத்தப்பட்டது என்ற கருத்து பல தரப்பினரிடையேயும் இருக்கிறது. அதன் பின்னர், நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்பட்டு 26 ஒகஸ்ட் 2016 அன்று, வர்த்தமானிப்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட காணாமல் போனோருக்கான அலுவலகமானது, எந்தவொரு சட்ட நடவடிக்கையையும் எடுக்கும் அதிகாரமற்ற அங்கமாகும். தகவல்களைத் திரட்டுவதற்காக மாத்திரமே இது செயற்படும். இந்தத் தகவல்கள் சட்ட நடவடிக்கைகளுக்கான சாட்சியங்களாக பயன்படுத்தப்படாது.

இந்தப் பின்னணியில் மேற்படி விவகாரத்தை ரணில் அரசு எவ்வாறு கையாளப்போகிறது என்பதனை நிதானமாக அவதானிக்கவேண்டியிருக்கிறது. நிலை மாறுகால நீதிச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக காணாமல்போனோரின் விடயம் இருக்கின்ற நிலையில், பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்குமான இழப்பீடுகள் வழங்குதல் என்பதுவே முக்கியமானதாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த விடயத்தில் நீதி நிலைநாட்டப்படவேண்டியதே முக்கியமான தேவையாகும்.

# முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளை முன்னுதாரணமாகக் கொள்வதை தவிர்க்க வேண்டும்!

## நூல் வெளியீட்டு நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

சிறுபான்மையினராக வாழ்கின்றபோது, முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழும் நாடுகளை முன்னுதாரணமாகக் கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், முஸ்லிம்கள் ஓர் ஆண் ஆதிக்க சமூகத்தினர் என்று ஒரு பார்வை இருப்பதாகவும் அதிலிருந்து விடுபடுவதும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதாகவும் கூறினார்

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தமிழக சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எழுதிய 'நபிகளாரின் சமூக உறவு' என்ற நூலின் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றும்போதே அவர் இவற்றைக் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது,

குறிப்பாக, யுத்தத்தின் முடிவோடு சேர்த்து, அன்றைய ஆட்சியாளர்களுடைய பார்வையில் "புலிகள் அழிந்தாகி விட்டது. இனி எங்களுக்கு யாராவது எதிரியை வரித்துக் கொள்ளவேண்டும்" என்று முஸ்லிம் சமூகத்தை தேர்ந்தெடுத்து விட்டார்கள். எல்லா இடங்களிலும் முஸ்லிம்களுடைய எல்லா விவகாரங்களிலும் மிகப் பெரிய சவால்களை நாங்கள் எதிர்நோக்கினோம்.

பெண்களின் உடையாக இருக்கட்டும், ஹலால் உணவாக இருக்கட்டும், இயல்பாக அதிகரிக்கின்ற சனத்தொகைப் பெருக்கமாக இருக்கட்டும், இப்படி இன்னோரன்ன விடயங்களில் எங்களோடு முரண்பட்டுக் கொள்கிற, எங்களுக்கு எதிரான இல்லாத பொல்லாத வதந்திகளையும் விஷமத்தனமான செய்திகளையும் பரப்பிக் கொண்டிருக்கிற நிறைய பேர் இருக்கின்றார்கள். அதற்கு ஆங்காங்கே அரச அனுசரணையும் கிடைக்கும் ஒரு நிலைவரம் தென்பட்டதுதான் எங்கள் எல்லோருக்கும் மிகப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

நாங்கள் வாழ்கின்ற இந்தப் பிராந்தியம் ஒரு சாமானியமான பிராந்தியமல்ல. இந்தப் பிராந்தியத்தில் முழு உலகிலும் வாழ்கின்ற முஸ்லிம்களில் மூன்றில் ஒரு பங்கினர் வாழ்கின்றோம்.

அதில் இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும்தான் சிறுபான்மையினராகவாழ்கிறோம். எனவே, எங்களுக்கு இருக்கிற மிகப் பெரிய முன்னுதாரணம் இந்திய முஸ்லிம்கள்தான், அவர்களுடைய போராட்டம்தான்.

இங்கு அமைச்சர் அலி சப்ரி பேசுகின்ற போது, சவூதி அரேபியா சீர்திருத்தங்களை மேற்கொண்டுவருவதாகச் சிலாகித்துக் கூறினார். எங்களைப் பொறுத்தமட்டில் இவ்வாறான முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளை எல்லாவற்றிலுமே முன்னுதாரணமாக கொள்வதிலிருந்து நாங்கள் தவிர்ந்து கொள்ளவேண்டும்.

ஏனென்றால், முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் அவர்களுடைய பழக்கவழக்கங்களாக இருக்கட்டும், அவர்களுடைய செயற்பாடுகளாக இருக்கட்டும், இஸ்லாமிய சட்டத்தின் செயற்பாடுகளாக இருக்கட்டும், அவற்றில் நெகிழ்வுத் தன்மை என்பதற்கான ஓர் இடம் உருவாகியிருக்கிறது. இதை பல அறிஞர்கள் ஆய்வு செய்திருக்கிறார்கள். பிக்ஹுல் அகல்லியாத்



என்ற ஒரு தனியான துறையே இருக்கிறது. அது முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பிக்ஹு சட்டம் ஓரளவு நெகிழ்வுத் தன்மையோடு பயன்படுத்தப்படவேண்டும் என்பதைக் கூறுகின்றது.

ஒற்றுமை அனைத்தையும் சாதிக்கும். நாங்கள் அரசியல் அணிகளாகப் பிரிந்திருக்கலாம். அதுவல்ல பிரச்சினை.

எங்களை விட்டு பிரிந்த இந்த யுகத்தின் மிகச் சிறந்த இஸ்லாமிய சிந்தனையாளர் அஷ்ஷெய்க் யூசுப் அல் கர்ளாவியை சில வருடங்களுக்கு முன்னர் கட்டாரில் சென்று சந்தித்த போது ,இலங்கையில் முஸ்லிம்களுக்கு உள்ள பிரச்சினைகளைச் சொன்னோம். நிறைய குறைகளைத்தான் சொன்னோம்.

அவற்றை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, கைகளைப் பற்றிக் கொண்டு, "ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். நான் எகிப்தைச் சேர்ந்தவன். எகிப்து என்றால் அரபுலகில் ஆகக்கூடிய சனத் தொகையைக் கொண்ட நாடு. முழு அரபுலகிலும் அரைவாசித் தொகையினர் எகிப்தில் வாழுகிறார்கள். அந்த நாட்டில் பிறந்தவன் நான். இன்று நான் அகதியாக இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஆனால், நாங்கள் செய்கின்ற அரசியலை நீங்கள் செய்யக்கூடாது" என்றார். "நீங்கள் எல்லோரும் எந்த அணியில் இருந்தாலும் சரி, ஒற்றுமையாக இருங்கள்'' என மிகத் தெளிவாகச் சொன்னார் . "ஒற்றுமை என்பதுதான் முக்கியம் அதை நீங்கள் மிக உன்னிப்பாகக் கடைப்பிடிப்பீர்களானால், முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளிலிருக்கின்ற முஸ்லிம்களை விடவும் நீங்கள் பலமாக இருப்பீர்கள்"என்றார்.

இவை அவர் சொன்ன வார்த்தைகள், இன்றும் கூட நாங்கள் அவற்றை மறக்கவில்லை.

நாங்கள் அணி பிரிந்து அரசியல் செய்கிறோம் என்ற காரணத்தினால் முஸ்லிம் சமூகம் பிளவுபட்டுப் போயிருக்கிறது என்று நினைக்கிறார்கள்.

எங்களுக்கு நிறைய சர்ச்சைகள் வரும், ஆட்சியாளர்கள் எவற்றை செய்யப்போகிறார்கள் என்ற விடயத்தில் பிரளயங்கள் உருவாகும். இந்திய முஸ்லிம்களைப் போன்று இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம்களுக்கும் தனியார் சட்டம் சம்பந்தமான விவகாரத்தில் அடிக்கடி சர்ச்சைகள் வரும். தனியார் சட்டங்கள் இல்லாமல் செய்யப்பட்டு அவற்றை பொதுச் சட்டத்திற்கு கீழ் வரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் வரும். இதை எப்படி எதிர்கொள்வது என்பதில் நிறைய சிக்கல்களும் வரும்.

நாடாளுமன்றத்தில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம், அதை திருத்துவது என்று அதற்கென்று அமைச்சரவையில் ஒரு பத்திரம் சமர்ப்பிப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு சிவில் சமூக பிரதிநிதிகள் சிலர் என்னைச் சந்தித்தார்கள்.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிடம் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கூடி அந்த விடயத்தை மிகவும் தெளிவாக, அதிலிருக்கும் சிக்கல்களை நாங்கள் விளங்கப்படுத்திச் சொன்னோம். எந்த சிக்கலுமில்லாமல் பிரச்சினையை தீர்க்கக்கூடியதாகவிருந்தது. ஆனால், இடையில் ஒரு சின்னச் சிக்கல். எங்களுடைய பெண்கள் சார்பாக வருகை தந்திருந்த பிரதிநிதிகளின் கருத்துகளையும் மனதில்கொள்ளவேண்டும்.

முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக இருக்கிற மிக முக்கியமான விமர்சனங்களில் ஒன்று பெண்கள் சம்பந்தப்பட்டதாகும். அதில் இருந்து நாங்கள் விடுபடவேண்டும். முஸ்லிம்கள் 'ஓர் ஆணாதிக்க சமூகம்' என்ற ஒரு பார்வை இருக்கிறது. அதிலிருந்து எப்படி விடுபடுவது என்ற முக்கியமான பிரச்சினை இருக்கிறது. ஒருசாரார், பெண்களின் உடைகளின் தெரிவு உட்பட ஆண்கள்தான் கட்டாயப்படுத்துகின்றனர் என்கின்றனர்.

பிரஸ்தாப கலந்துரையாடலில், பலதாரமணம் சர்ச்சைக்குரிய விடயமாகப் போய்விட்டது, பலதாரமணத்திற்கான அனுமதியை இல்லாமல் செய்யவேண்டும் என்பது முக்கியமான ஒரு விடயமாக மாறிவிட்டது. அரசாங்கம் அதை நீக்குவது என்பதற்கும் சட்டநகலைத் தயாரித்துவிட்டது.

இதைத்தான் நாங்கள் கலந்துரையாடியபோது மிகத் தெளிவாக விவகாரங்களில் உடன்பாடு கண்டோம். முக்கியமான நிபந்தனைகளின் அடிப்படையில் அதை நாங்கள் அனுமதிக்கலாம். ஆனால், நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், அதை முழுக்க முழுக்க இல்லாமல் செய்வதற்கான முயற்சிக்கு இடமில்லை. ஏன் எமக்குரிய சட்டத்தையே எடுத்துவிட்டு பொது நீதிமன்றங்களில் வழக்காடச் செய்யவேண்டும் என்றும் காதி நீதி மன்றங்களை இல்லாமல் செய்ய வேண்டும் என்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவற்றை ஒரு பேச்சுவார்த்தை மூலம் எல்லா முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமைப்பட்டதனால் சாதிக்கமுடிந்தது. அமைச்சரும் எங்களுடைய அந்த வாதத்தை மிகத்தெளிவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், நாங்கள் அவற்றை முன்வைத்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எங்களுடைய சகோதரிகளோடு தேவையற்ற முரண்பாடுகள் வருவதுதான் பிரச்சினையாக இருக்கிறது. அவர்களை நாங்கள் சிநேகபூர்வமாக அணுகி விடயங்களைத் தெளிவுபடுத்தவேண்டும் என்றார்.

# தேசிய டிஜிட்டல் கொள்கையொன்று இல்லாமையால் சர்வதேச ரீதியில் இலங்கைக்குப் பின்னடைவு






பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

தேசிய டிஜிட்டல் கொள்கையொன்று இல்லாமை காரணமாக உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை கடுமையாகப் பின்னடைந்துள்ளதாக இக்கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

உபகுழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத்துறையுடன் தொடர்புபட்ட சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு அரச மற்றும் தனியார் துறையில் தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள், அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

விசேடமாக E-Governance எண்ணக்கருவின் கீழ் அரச நிறுவனங்களை ஒன்றிணைக்கும் வலையமைப்பை ஸ்தாபிப்பதற்கு முடியாமல் உள்ளமை மற்றும் அந்தக் கொள்கைகளை துரிதமாகத் தயாரித்து அரசாங்கம், பிரஜைகள் மற்றும் வர்த்தகர்களுக்கிடையில் இடைவெளியைக் குறைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் இந்நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறை பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும், அதில் பல வருடங்கள் அனுபவம் கொண்ட தொழில்வாண்மையாளர்களின் உழைப்பு நாட்டை விட்டு வெளியே செல்வது பிரதான சிக்கலாகும் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது இலங்கையில் பாடசாலை பாடத்திட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பாடத்தை அறிமுகம் செய்திருந்தாலும், அதில் துறைசார் நிபுணர்கள் போதியளவு தலையீட்டை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளமை குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், புதிதாக மேற்கொள்ளப்படும் கல்வி மறுசீரமைப்புகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தை கட்டாயப் பாடமாகக் கொண்டுவரும் இயலுமை தொடர்பில் கண்டறியுமாறு இதன்போது பரிந்துரைக்கப்பட்டது.

அதேபோன்று, அரச பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில்நுட்பப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட விரிவுரையாளர்களின் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும் என இங்கு கருத்து முன்வைக்கப்பட்டதுடன், விரிவுரையாளர்களுக்கு ஒரு சில வரி நிவாரணத் திட்டத்தை தயாரிப்பது பொருத்தமானது என குழுவில் முன்மொழியப்பட்டது.

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்துறையின் உழைப்பின் தரமான தன்மை உயர்ந்தளவில் காணப்படுவதாக துறைசார் நிபுணர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

அதனால் துறைசார் உழைப்புக்கான கேள்வி தொடர்பில் பாரிய சிக்கல்கள் இல்லை என்பதால், நாட்டிலிருந்து வெளியேறாமல் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளிலுள்ள நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு அனுமதிப்பதன் மூலம் நாட்டிற்குள் வரும் வெளிநாட்டு செலாவணியை அதிகரிக்க முடியும் என்றும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

அதற்கு மேலதிகமாக தற்போதைய மின்சார நெருக்கடியினால் ஏற்படும் மின்வெட்டு காரணமாக சிறிய அளவிலான தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாவது மற்றும் பாரிய நிறுவனங்களின் மின்சக்தி செலவு அதிகரிப்பது பற்றியும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அண்ணளவாக 3.47 மில்லியன் டொலர்களான இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரம் மொத்த பொருளாதாரத்தின் 4.7 % என்பதுடன், உலகிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது 15% அளவில் காணப்படுவதாக குழுவில் கலந்துரையாடப்பட்டது. அதேபோன்று, சிறிய அளவிலான விற்பனையாளர்களுக்கு கப்பல் கட்டணம், தபால் கட்டணம் மற்றும் கூரியர் சேவைக் கட்டணம் போன்ற ஏற்றுமதி செலவுகளை குறைத்துக்கொள்ள ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வேலைத்திட்டமொன்றை மேற்கொள்வதன் அவசியம் குறித்தும் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தக் கூட்டத்தில் அரச மற்றும் தனியார் துறையுடன் தொடர்புபட்ட நிபுணர்கள், அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்கள், தொழில்வாண்மையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1857 – இத்தாலியின் நேப்பிள்ஸில் இடம்பெற்ற 6.9 நிலநடுக்கத்தில் 10,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- 1920 – சீனாவில் கான்சு நகரில் 8.6 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 200,000 பேர் வரை கொல்லப்பட்டனர்.
- 1925 – இலங்கை வானொலியின் ஒலிபரப்பு சேவை கொழும்பில் ஆரம்பமானது.
- 1971 – வங்காளதேச விடுதலைப் போர் மற்றும் 1971 இந்திய-பாகிஸ்தான் போர்: பாகிஸ்தானிய இராணுவம் சரணடைந்ததை அடுத்து போர் முடிவுக்கு வந்தது. இந்நாள் வங்காளதேசத்திலும் இந்தியாவிலும் வெற்றி நாளாகக் கொண்டாடப்படுகிறது.
- 2014 – பாகிஸ்தானின் தெகரிக்கு-இ-தாலிபான் போராளிகள், பெஷாவர் நகரில் இராணுவப் பாடசாலையொன்றின் மீது தாக்குதல் நடத்தியதில் 145 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் பாடசாலைச் சிறுவர்களாவர்.

# நமது பொருளாதாரம் முச்சக்கரவண்டி போல் உள்ளது; நாம் எப்படி சிங்கப்பூர் ஓட்டப் பந்தயத்திற்கு செல்வது?

## கடனை மீளச் செலுத்தக்கூடிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகக் கூறுகிறார் ஜனாதிபதி ரணில்



நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு நிச்சயமாக பாடுபடுவேன் என வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடன் சுமையற்ற மற்றும் கடனை மீளச் செலுத்தக்கூடிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவேன் என்றும் தெரிவித்தார்.

இலங்கை-ஜப்பான் உறவுகளின் 70 வருட பூர்த்தியை முன்னிட்டு டொயோட்டா லங்கா நிறுவனத்தினால் கடவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட மோட்டார் உதிரிப் பாகங்கள் விநியோக நிலையத்தை நேற்று முன்தினம் (14) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான பொருளாதார வேலைத்திட்டத்தில் மாற்றம் ஏற்படாமையால் இன்று நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், அடுத்த வருடத்திற்குள் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்து பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக் கூடியதும் நாட்டுக்கு முதலீட்டு வாய்ப்புகளை கொண்டு வரக்கூடியதுமான நிறுவனக் கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை முதலீட்டு சபையின் முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவை, ஏற்றுமதி மேம்பாட்டு சபையுடன் இணைத்து பொருளாதார கூட்டுத்தாபனமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில்.

“இன்று வியட்நாமின் பொருளாதாரம் போர்மியுலா வன் பந்தயக் கார் போல் உள்ளது. நமது பொருளாதாரம் இன்னும் முச்சக்கரவண்டி போல் உள்ளது. அப்படி இருப்பின் நாம் எப்படி சிங்கப்பூர் ஓட்டப் பந்தயத்திற்கு செல்வது? மற்ற நாடுகளுக்கு போர்மியுலா வன் பந்தயக் கார்கள் உள்ளன. நாங்கள் முச்சக்கரவண்டியில் சென்று போட்டியிடலாமா? மக்கள் தினமும் பயணம் செய்வதற்கே இது நல்லது. அதில் எந்த பிரச்சினையும் இல்லை. இது நன்றாக இருக்கிறது என்று மீண்டும் சொல்கிறேன். ஆனால், பந்தயத்திற்கு அது சரியாகப் போவதில்லை. நாம் எப்படி வெல்வது? அவ்வாறென்றால் நாம் ஒரு பந்தய காரைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு நல்ல இயந்திரம் இருக்க வேண்டும். அதாவது நல்ல பொருளாதாரம்.

அதுதான் இப்போது நாம் கட்டியெழுப்பும் பொருளாதாரம். இந்த நாட்டில் திறந்த பொருளாதாரத்தை உருவாக்கி அந்த இயந்திரத்தை உருவாக்குகிறோம். போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்கி உலகத்துடன் போட்டியிடும் வகையில் இந்தப் பந்தய கார் தயாரிக்கப்படுகின்றது. அதை வெல்லும் திறமை உங்கள் அனைவருக்கும் இருப்பதாக நான் நம்புகிறேன்.





முதலில் நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரம், சூழல் நேயப் பொருளாதாரம், அத்துடன் சமூக நீதியான பொருளாதாரம் மற்றும் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த ஏற்றுமதி பொருளாதாரம் என்பன உருவாக்கப்பட வேண்டும். அதற்காகவே இந்த மறுசீரமைப்பு செய்யப்படுகிறது. பழைய முறைகளில் பழகியவர்கள் இதை எதிர்க்கலாம். ஆனால், நாம் புதிய பாதையில் செல்ல வேண்டும். நீங்கள் பந்தயக் காரில் செல்ல விரும்புகிறீர்களா, மிதிவண்டியில் செல்ல விரும்புகிறீர்களா என்று என்னிடம் சொல்லுங்கள். ஏனென்றால், எதிர்காலம் உங்கள் அனைவருக்கும் சொந்தமானது.

பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து டொயோட்டா மோட்டார் உதிரிப் பாகங்கள் விநியோக நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு கண்காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டார்.

இலங்கை-ஜப்பான் உறவுகளின் 70 ஆண்டு நிறைவைக் கொண்டாடியதுடன், ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. டொயோட்டா லங்கா நிறுவனத்தின் ஊழியர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கைக்கான ஜப்பானிய துதுவர் மிசுகோஷி ஹிடேகி, டொயோட்டா லங்கா நிறுவனத்தின் தலைவர் சவியோ யோட்சுகுரா மற்றும் டொயோட்டா லங்கா நிறுவனத்தின் ஊழியர்கள் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# இந்திய கடற்படைத் தளபதி இலங்கை விமானப்படைத் தளபதியுடன் சந்திப்பு

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ஹரிகுமார் மற்றும் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை விமானப்படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது.





வருகை தந்த இந்திய கடற்படைத் தளபதிற்கு இலங்கை விமானப்படை வர்ண அணிவகுப்பு படைப்பிரிவின் அணிவகுப்பு மரியாதை வழங்கி வரவேற்கப்பட்டது. இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவப் பயிற்சி மற்றும் பிராந்திய கடல்சார் பாதுகாப்பு தொடர்பாக சிநேகபூர்வ கலந்துரையாடலும் இடம்பெற்றது. இறுதியாக இந்நிகழ்வை நினைவு கூரும் வகையில் இருவருக்கும் இடையிலான நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன மேலும், இந்த சந்திப்பில் இலங்கை விமானப்படையின் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்

# யாழ். பல்கலைக்கழகம் – இலங்கை வங்கி உடன்படிக்கை

(யாழ். நிருபர் )

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வழங்கப்படும் தொழில் நிர்வாகமாணி, வணிகமாணி ஆகிய இரு பட்டப் படிப்புகளிலும் முன்னணி பெறும் மாணவர்களுக்கு வருடாந்த பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை வங்கியினால் ‘இலங்கை வங்கி விருது’ வழங்கப்படவுள்ளது.




இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு, நேற்று (15) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், இலங்கை வங்கியின் சார்பில் அதன் வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் வி.சிவானந்தனும் கையொப்பமிட்டனர். விருதுக்கான வைப்புச் சான்றிதழ் பல்கலைக்கழக நிதியாளர் கே. சுரேஸ்குமாரிடம் கையளிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், இலங்கை வங்கியின் பிராந்திய உதவி முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் வங்கியியலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தில் தொழில் நிர்வாகமாணி, வணிகமாணி ஆகிய பட்டங்களைப் பெறும் மாணவர்களில் முதல்நிலை பெறும் மாணவர்களுக்கு வருடாந்தம் தங்கப்பதக்கத்தையும் சான்றிதழையும் வழங்குவதற்கென இலங்கை வங்கியினால் ரூ. 10 இலட்சம், இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெயரில் வைப்பிலிடப் பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் இலங்கை வங்கி விருதுக்கான தங்கப் பதக்கமும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

# திருமகனே தாலேலோ கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்ச்சி நாளை

திருமறைக் கலாமன்றம் நடத்தும் திருமகனே தாலேலோ என்னும் கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்ச்சி நாளை (17.12.2022 ) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இல.286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் தேவாலயங்களில் பாடகர் குழாம்களும் இணைந்து கரோல் கீதங்களை வழங்கவுள்ள இந்நிகழ்வில் கத்தோலிக்க தேவாலயப் பங்குகளான யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம், நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம், புனித பரலோக அன்னை ஆலயம், சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயம், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்,மாசியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயம் மற்றும் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் யாழ்ப்பாணம் நகர்பணி என்பன பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளன.

இந்நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

# முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால விமோசனம் கருதி கல்விச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வேண்டும்

## தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் சுட்டிக்காட்டு

*(பேருவளை பீ.எம்.முக்தார்)*



சமூகத்தின் தலைவிதியை மாற்றக்கூடிய சக்தி மிக்க ஆயுதம் கல்வியேயாகும். எனவே, முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால விமோசனம் கருதி நாம் கல்வி செயற்பாடுகளுக்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகரான கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் கூறினார்.



தர்கா நகர் ஸாஹிரா ஆரம்பப் பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.ஸாஹிரா தேசிய பாடசாலை மர்ஹூம் எம்.ஐ.எம்.நளீம் ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு அதிபர் எம்.எச்.எம்.ஸக்வான் தலைமை வகித்தார். நஜீப் ஹாஜியாருக்கு அமெரிக்க பல்கலைக்கழகமொன்றினால் கலாநிதி பட்டம் வழங்கியமை குறித்தும் இங்கு பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவர் மேலும் கூறியதாவது,

வறுமை என்றும் கல்விக்குத் தடையாக இருக்கக் கூடாது. நான் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வி கற்று இந்நிலைக்கு வந்துள்ளேன். கல்வியின் மகிமையை உணர்ந்து எல்லா சவால்களையும் முறியடித்து மாணவர்கள் சிறப்பாக கல்வி பயில வேண்டும். எல்லா சவால்களையும் வெற்றி கொள்ளக் கூடிய சக்தி மிக்க ஆயுதம் கல்வியாகும்.

வறுமையை சகித்து நான் கல்வி கற்றேன். கல்விதான் என்னை உயர்நிலைக்கு கொண்டு வந்தது. தமிழ், அரபு, ஆங்கில மொழிகளில் நான்கு நூல்களையும் வெளியிட்டுள்ளேன் என்றார்.

பாடசாலை அதிபர்களான நிஸ் ரீன் அஷ்கர், பாத்திமா பஸ்லியா, ஜெஸீலா மற்றும் ஆசிரிய ஆலோசகர்களான எம்.புஹாரி முஹம்மத், எம்.அன்வர், ரிஹான் காலித், எம்.என்.முஹம்மத் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 15.12.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 133 5110 | 145 1163 |
| கனேடியன் டொலர் | 152 7 48 | 165 236 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 762 | 43 2 6 |
| யூரோ | 271 0618 | 286 8018 |
| ஜப்பான் யென் | 1 5323 | 1 6430 |
| சிங்கப்பூர் டொலர் | 154 04 1 | 165 8 16 |
| ஸ்ரேலிங் பவுன் | 333 8338 | 351 0704 |
| சுவிஸ் பிரான்ங் | 274 55 2 | 3 3 8303 |
| ஐ.அ.டொலர் | 250 0862 | 260 6080 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 1672 |
| குவைட் | குவைட் தினார் | 0,073 3 38 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 1646 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 8372 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 48 3 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7645 |



# வட்டாரங்களை குறைப்பதற்கு எதிரான தீர்மானம் காரைநகர் பிரதேச சபையில் நிறைவேற்றம்!



(யாழ். நிருபர்)

உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு எதிரான தீர்மானம் ஒன்று நேற்று முன்தினம் (14) காரைநகர் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டது.

சபையின் மாதாந்த பொதுக் கூட்டம் சபையின் தவிசாளர் பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது குறித்த பிரேரணையை தவிசாளர் சபையில் முன்வைத்தார்.

இந்தப் பிரேரணைக்கு ஈ.பி.டி.பி. கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அனைத்து கட்சிகளினது உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். அதனையடுத்து பிரேரணை சபையில் தீர்மானமாக்கப்பட்டது.

இந்தத் தீர்மான அறிக்கையானது பிரதேச செயலர், உள்ளூராட்சி அமைச்சர், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக தவிசாளர் தெரிவித்துள்ளார்.

# அல்வாய் மோதலில் காயமடைந்தவர்களை மீட்கச் சென்ற அம்பியூலன்ஸ் மீது தாக்குதல்




(யாழ். நிருபர்)

இரு கும்பல்களுக்கு இடையிலான மோதலில் காயமடைந்தவர்களை அங்கிருந்து மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முற்பட்ட அம்பியூலன்ஸ் மீதும் வன்முறைக் கும்பல் தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன், அதில் இருந்த உயிர்காப்பு பணியாளர்களையும் அச்சுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, அல்வாய் வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் (14) இரவு இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

மோதல் சம்பவத்தில் காயமடைந்தவர்களை அங்கிருந்து மீட்டு, வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முற்பட்ட அம்பியூலன்ஸுக்கு வன்முறைக் கும்பல் இடையூறுகளை ஏற்படுத்தி, உயிர்க்காப்புப் பணியாளர்களையும் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த வன்முறைக் கும்பலிடமிருந்து அம்பியூலன்ஸ் சாரதி சாதுரியமாக அம்பியூலன்ஸை அங்கிருந்து நகர்த்த முற்பட்டவேளை அதன்மீது வன்முறைக் கும்பல் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

அதனையடுத்து சாரதி, காயமடைந்தவர்களை ஏற்றியவாறு அங்கிருந்து அம்பியூலன்ஸை சாமர்த்தியமாக நகர்த்தி தப்பியோடி வைத்தியசாலையில் காயமடைந்தவர்களை சேர்த்துள்ளார்.

அம்பியூலன்ஸ் மீதான தாக்குதல் மற்றும் பணியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அச்சுவேலியில் கடை உடைத்து திருடிய குற்றத்தில் தம்பதியினர் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி வளலாய் பகுதியிலுள்ள மீன்பிடி உபகரணங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தை உடைத்து, அங்கிருந்த பொருட்களை திருடிய குற்றச்சாட்டில் தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தக நிலையத்தை உடைத்து, அங்கிருந்த சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் திருடப்பட்டிருந்தன.

அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வர்த்தக நிலைய உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அப்பகுதியைச் சேர்ந்த தம்பதியினர் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் அவர்களிடமிருந்து திருடப்பட்ட பொருட்களில் சிலவற்றை மீட்டுள்ளனர்.

கணவன் - மனைவி இருவரையும் தொடர்ந்தும் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பாடசாலை நேரத்தில் மதில் பாய்ந்து வீட்டுக்கு ஓடும் ஆசிரியருக்கு யாழ். தீவக வலய ஆசிரிய வளவாளர் பதவி வழங்கியது யார்?

## கேள்வி எழுப்பியுள்ளார் ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன்






(யாழ். நிருபர்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் பாடசாலை நேரத்தில் மதில் பாய்ந்து வீட்டுக்குச் செல்லும் ஆசிரியர் ஒருவருக்கு தீவக பகுதி ஆசிரிய வளவாளராக நியமனம் வழங்கப்பட்டது எப்படி? என ஆசிரியர் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

நேற்று முன்தினம் (14) வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தின் பின்னர் ஆளுநரின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் மேற்படி கேள்வியை எழுப்பியிருக்கின்றார். இதன்போது மேலும் அவர் குறிப்பிடுகையில்,

பாடசாலை நேரத்தில் மதில் பாய்ந்து வீட்டுக்குச் செல்லும் மேற்படி ஆசிரியர் தொடர்பில் பல முறைப்பாடுகள் உள்ளன. ஆசிரியர் சங்கத்தால் பல முறைப்பாடுகளை கல்வி அமைச்சுக்கு வழங்கியிருந்தோம். ஆனால், குறித்த ஆசிரியர் மீது ஒழுக்காற்று விசாரணைகள் எவையும் இடம்பெறாத நிலையில் தீவக வலயத்திற்கு தமிழ் பாட வளவாளராக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு ஆசிரியருக்கு இருக்கவேண்டிய ஒழுக்கப் பண்புகளே இல்லாத ஒருவரை ஒரு கல்வி வலயத்தின் ஆசிரிய வளவாளராக நியமிப்பதற்கு அனுமதி வழங்கியது யார்? எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார், இது மட்டுமல்லாமல் ஆசிரியர்கள் பாடசாலையில் வெற்றிலை போடுவதாக கூட எமக்கு பல முறைப்பாடுகள் வருகின்றன. ஆனால், ஆசிரியர்களின் ஒழுக்கம் தொடர்பில் ஆசிரியர் சங்கங்கள்தான் வழிப்படுத்த வேண்டும் – என்றார்.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகள் தினவிழா





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பிரதேச செயலகம் ஏற்பாடுசெய்த மாற்றுத்திறனாளிகள் தினவிழா நேற்று (15) மு.ப. 10.30 மணியளவில் மன்னார் கலையருவி மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் கலந்துகொண்டார்.

விருந்தினர்களாக மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கே.மகேஸ்வரன், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ், மன்னார் மாற்றாற்றல் உள்ளோர் மறுவாழ்வு சங்க இயக்குனர் அருட்சகோதரி ஜோசப்பின் மேரி உட்பட அழைக்கப்பட்ட அதிகாரிகள் மாற்றாற்றல் கொண்ட மாணவர்கள், உறவினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாற்றுத்திறனாளிகள் தின விழாவையொட்டி நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, விருந்தினர்களினால் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# சர்வதேச ரோட்டரிக் கழகத் தலைவரின் வருகையை முன்னிட்டு முத்திரை வெளியீடு




(சாவகச்சேரி நிருபர்)

சர்வதேச ரோட்டரிக் கழகத் தலைவரும்-ரோட்டரிக் கழகத்தின் முதல் பெண் தலைவியுமான ஜெனிபர் ஜோன்சன் நேற்றுமுன்தினம் 14திகதி கொழும்பிற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கையில் உள்ள ரோட்டரிக் கழகங்களின் அங்கத்தவர்களைச் சந்தித்திருந்தார்.

கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் ரோட்டேரியன் புகுது டீ சொய்சா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சர்வதேச ரோட்டரிக் கழகத் தலைவரின் வருகைக்கான நினைவுச் சின்னமாக 50ரூபா பெறுமதியான முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சட்டவிரோதமான வெளிநாட்டுப் பிரயாணம்; வேலைவாய்ப்பு பணியகம் பொறுப்பேற்காது

(கண்டி நிருபர்)

முறையற்ற வகையில் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று பிரச்சினைகளில் அகப்பட்டுக் கொண்டால் அதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் பொறுப்புக் கூறமாட்டாது என அந்தப் பணியகத்தின் தலைவர் மகேந்திர குமாரசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை (13) தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

கல்வி மற்றும் சுற்றுலா சம்பந்தமான விசாவில் வெளிநாடு சென்று தொழில் பெற்றவர்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும்போது, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு சட்டரீதியிலான நடவடிக்கை எடுக்கும் அதிகாரங்கள் எதுவும் இல்லை. சிலர் அவ்வாறு சட்டத்துக்கு முரணாகச் சென்று பிரச்சினைகளில் அகப்பட்டுக்கொள்கின்றனர். எனவே இது குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்வோர் அவதானமாக இருக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

இதன்போது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், மேலதிக செயலாளர் உத்பலா ஜயரட்ன, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கண்டி மாவட்ட பொது முகாமையாளர் எஸ். யாப்பா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# புலோலியில் வீடுடைத்து திருட்டு: நால்வர் கைது; 14 பவுண் தங்க நகைகளும் மீட்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி புலோலியில் ஆட்களில்லாதவேளை வீட்டை உடைத்து திருட்டில் ஈடுபட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 14 பவுண் தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

புலோலி சாரையடிப் பகுதியில் டிசம்பர் 7ஆம் திகதி வீட்டின் உரிமையாளர்கள் வைத்தியசாலைக்கு சென்றதை சாதகமாக பயன்படுத்தி வீடுடைக்கப்பட்டு அங்கிருந்த நகை மற்றும் ரொக்கப்பணம் என்பன திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. விசாரணைகளை மேற்கொண்டுவந்த பருத்தித்துறை பொலிஸ் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைவாக நேற்று முன்தினம் (14) குற்றத்தடுப்புப் பிரிவின் உப பரிசோதகர் விராஜ் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து தாலிக்கொடி, மோதிரம், தோடு அடங்கலாக 14 பவுண் தங்கநகையும் மீட்கப்பட்டுள்ளது.

# பொல்கொல்லையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(கண்டி நிருபர்)

கண்டி, பொல்கொல்லை நீர்த்தேக்கத்திற்கு அருகில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் (14) மீட்கப்பட்டுள்ளது. கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகாவலி கங்கையின் கிளை ஆறு ஒன்றிலேயே மேற்படி சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பொல்கொல்லை - உயன்வத்தை சந்திக்கு அருகில் மகாவலி கங்கையை நோக்கி ஓடும் சிறிய ஆறு ஒன்றிலேயே மேற்படி சடலத்தை கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார், கண்டு பிடித்துள்ளனர்.

வத்தேகம, யடிராவன பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய, பிரதீப் சமிந்தகுமார என்ற நபரின் சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேற்படி நபர் சில தினங்களாக காணாமல் போயுள்ளதாக வத்தேகம பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இச்சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவரது உயிரிழப்புக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. வத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மகரஜோதிப் பெருவிழா

(இராகலை நிருபர்)

கொட்டகலை சௌமியமூர்த்தி தொண்டமான் தொழிற்பயிற்சி நிறுவனமான சி.எல்.எப். வளாகத்தில் மகரஜோதிப் பெருவிழா நாளை (17) மாலை 4.00 மணி முதல் ஐயப்பனுக்குரிய விசேட பூஜைகளுடன் நடைபெறவுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மகரஜோதிப் பெருவிழாவில் தென்னிந்தியாவின் பிரபல ஐயப்பன் பக்தி பாடல்கள் இசைத்துப் புகழ்பெற்ற வீரமணி - அபிஷேக் இசைக் குழுவினர் கலந்துகொண்டு விசேட ஐயப்ப பஜனை இசைநிகழ்ச்சியை நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வுகளில் குருசுவாமிமார் உள்ளிட்ட ஐயப்பன் சுவாமிமார், பக்த அடியார்கள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ரணிலின் திட்டத்துக்கு ஆதரவளியுங்கள்

## கண்டி எம்.பி வேலுகுமார் வலியுறுத்து

" உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நிறுவப்படவுள்ள தேசிய கொள்கைத் திட்டத்துக்கு அனைத்து கட்சிகளும் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்." என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

பட்டினியால் வாடும் மக்களை அதிலிருந்து மீட்பதும், உணவுப் பஞ்சம் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதும் மக்கள் பிரதிநிதிகளின் கடப்பாடாகும். எனவே, இது தொடர்பில் முன்வைக்கப்படும் சட்டமூலங்களுக்கு கட்சி பேதமின்றி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் வேலுகுமார் எம்.பி. வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் பாரிய சமூக நெருக்கடியும் ஏற்பட்டது. இதில் உணவு பற்றாக்குறை அல்லது உணவு பஞ்சமென்பது பிரதான விடயமாகும். மறுபுறத்தில் உரப்பிரச்சினை உள்ளிட்ட



காரணங்களால் உள்நாட்டு உற்பத்தியும் வீழ்ச்சி கண்டுள்ளது. இதனால் உணவு பாதுகாப்பு தொடர்பில் அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு என்ற விடயப்பரப்புக்குள் பொருளாதார பாதுகாப்பும் வருகின்றது. அதில் ஓர் அங்கமாக உணவு பாதுகாப்பு என்ற விடயமும் உள்ளடக்கப்பட வேண்டும். இதனை உணர்ந்து தேவையான சட்டங்கள் இயற்றப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளது வரவேற்கக்கூடிய விடயமாகும்.

அதேபோல உணவு பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதியால் உருவாக்கப்படவுள்ள தேசிய வேலைத்திட்டத்துக்கு எமது தரப்பு யோசனைகளும் முன்வைக்கப்படும். உணவுப் பாதுகாப்பு மற்றும் மக்களின் போஷாக்கு நிலையை உறுதிப்படுத்துவதில் துல்லியமான தரவுகளைப் பெறுவதற்கு இவ்வேலைத்திட்டம் உதவியாக இருக்குமென நம்புகின்றோம். ஏனெனில் மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களுள் 50 வீதமானோர் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இதற்கு வறுமையும் பிரதான காரணம் ஆகும். மறுபுறத்தில் சிறார்கள் மத்தியில் மந்தபோசனை விகிதமும் அதிகரித்துள்ளது. அதன் அபாயத்தை ஆபத்தை உலக உணவு திட்டம் உரிய தரவுகளுடன் பட்டியலிட்டுள்ளது. எனவே, மலையக பெருந்தோட்டப்பகுதிகளுக்கு அவசரமாக அத்தியாவசியமாக உதவிகள் தேவைப்படுகின்றன. அதற்கு இந்த தேசிய வேலைத்திட்டம் வழிவகுக்கும். இதன்காரணமாகவே அதனை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் இருக்கின்றேன். இது மக்களின் உயிருடன் வாழ்வுடன் வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்ட விடயமென்பதால் ஆதரவு வழங்க வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும். நாட்டில் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்களினால் நாட்டின் விவசாயம் பாதிக்கப்பட்டது. அவ்வாறான தவறுகளையும் திருத்திக்கொண்டு, உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். அப்போதுதான் உலக நெருக்கடியையும் சமாளிக்க முடியும். குறிப்பாக உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின்போது மலையகத்துக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கப்பட வேண்டும் என்றார்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

## நெஸ்டமோல்ட் Aramunata Shakthiyak

நெஸ்லே நிறுவனத்தின் நெஸ்டமோல்ட் முன்னெடுக்கும் 'Aramunata Shakthiyak' எனும் திட்டமானது, தற்போதைய சமூக-பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் தமது குடும்பங்களின் முன்னேற்றத்தை உறுதி செய்ய, அர்ப்பணிப்புடன் உழைத்து வருகின்ற நாடு முழுவதும் உள்ள போற்றுதற்குரிய அன்னையரின் விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு செயற்றிட்டமாகும். அந்தவகையில், நெஸ்லே லங்காவின் பிரதான வர்த்தகநாமமானது, இலங்கை குடும்பங்களின் அபிலாஷைகளை வலுப்படுத்தும் முயற்சியில், அத்தகைய 1,000 அன்னையருக்கு 3 மாதத்திற்கான நெஸ்லே நெஸ்டமோல்ட்டை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.



2022 செப்டெம்பரில் தொடங்கப்பட்ட இந்த முயற்சியில், வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்க்கையில் போற்றுதற்குரிய அன்னையரின் பெயர்களைப் பரிந்துரைக்கும்படியும், சமூக ஊடக தளங்கள் வழியாக அவர்களின் ஊக்கமளிக்கும் கதைகளைப் பகிர்ந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். நாட்டின் நாற்திசையிலிருந்தும் இம்முயற்சிக்கு அமோகமான வரவேற்பைப் பெற்றிருந்த நிலையில், பரிந்துரைக்கப்பட்டவர்கள் மத்தியிலிருந்து தகுதிவாய்ந்த 1,000 பேரைத் தேர்ந்தெடுத்து இந்த வர்த்தகநாமம் அவர்களுக்கு வெகுமதி அளித்துள்ளது.

## விருந்தோம்பல் துறை மீண்டெழ SLT-MOBITEL ஆதரவு




ஹோட்டல் துறையினால், சுற்றுலாப் பயணிகளுக்கு வெகுமதியுடனான அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதன் தேவைகளை புரிந்து கொண்டு, SLT-MOBITEL Enterprise இனால் பரிபூரண தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் சிறந்த பக்கேஜ்கள் போன்றவற்றை விருந்தோம்பல் துறைக்கு வழங்கி, அதனூடாக தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்க முன்வந்துள்ளது. துறைசார்ந்த நிறுவனங்களை தமது ஹோட்டல்களுக்கும் சொத்துகளுக்கும் சிறந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கி, சுற்றுலா வருகைகளை அதிகரிக்கச் செய்வதற்கு வலுவூட்டவும், cloud அடிப்படையிலான check-in தீர்வை வழங்கி, நிறுவனங்களை தொலைவிலிருந்தும் கட்டுப்பாட்டில் பேணுவதற்கு உதவவும் முன்வந்துள்ளது.

check-in வியாபார தீர்வில், ஒன்லைன் பிரயாண முகவர்கள் மற்றும் கொடுப்பனவு கேட்வே உடனான Booking engineஐ கொண்டுள்ளதுடன், மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய நாட்காட்டியுடனான நாட்காட்டி முகாமைத்துவம் மற்றும் உடனுக்குடனான மெருகேற்றங்கள், கொடுப்பனவுகள் மற்றும் கட்டணப் பட்டியல் மாதிரிகள், செயற்பாடுகளை சுயமாக்கக் கூடிய housekeeping மாதிரி, வாடிக்கையாளர் தகவல்கள் மற்றும் தேவைகளை பின்தொடரக்கூடிய CRM செயற்பாடுகள் மற்றும் பெருவாரியான அறிக்கைகளை தயாரிக்கக்கூடிய வசதி போன்றன அடங்கியுள்ளன. வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில், SLT-MOBITEL Enterprise இனால் அடுத்த தலைமுறைக் குரல், வலையமைப்பு, டேட்டா ஹோஸ்டிங் மற்றும் நிர்வகிப்பு சேவைகள் போன்றன one-stop-shop ஆக வழங்கப்படுவதுடன், விருந்தோம்பல் துறைக்கு மதிநுட்பமான தொழில்நுட்ப வசதி வழங்கப்பட்டு, வேகமாக வளர்ச்சியடைய பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

SLT-MOBITEL Enterprise இனால் குரல் சேவை வழங்கப்பட்டு, ஹோட்டல்களுக்கு தமது தொடர்பாடல் கட்டமைப்பை, பிரத்தியேகமான தொடர்பாடல் வட்டமாக மாற்றியமைத்துக் கொள்ளும் வசதி வழங்கப்படுகின்றது.

## Snow Worldஐ மீண்டும் அறிமுகப்படுத்தும் Excel World




வரவிருக்கும் பண்டிகைக் காலக் கொண்டாட்டங்களை மனதில் கொண்டு, எக்செல் வேர்ல்ட் அதன் மிகவும் விரும்பப்படுகின்ற அத்துடன் அடையாளச் சின்னமான Snow World அனுபவத்தை மீண்டும் அறிமுகப்படுவதன் மூலம் விடுமுறைக் கொண்டாட்டங்களை தொடங்கிவைகின்றது. மூன்று வருட இடைவெளிக்குப் பின்னர், மேம்பட்ட வண்ணங்கள், ஒளியூட்டல்கள் என்பவற்றுடன் மேலும் பலவற்றை புதிதாக வழங்குவதன் மூலம் தனித்துவமான பனிக்குளிர்வூட்டும் இடம் பொதுமக்களுக்காக மீண்டும் தொடங்கப்படவுள்ளது.

இப்புதுமையான அம்சங்கள், வட துருவத்தில் நத்தார் பாப்பாவின் பனிக் குளிர்காலத்தை நினைவூட்டும் பனிக்கட்டி நிறைந்த குளிர்கால அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள அனைத்து வயதினரையும் கொண்டு செல்வதில் முக்கிய பங்குவகிக்கும். இது தவிர, முழுக் குடும்பத்திற்குமென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்குகளை உள்ளடக்கிய Festive Carnival நிகழ்வையும் எக்செல் வேர்ல்ட் ஏற்பாடுசெய்யவுள்ளது.

2017ஆம் ஆண்டு முதல் எக்செல் வேர்ல்டுக்கு 450,000 - 500,000 எண்ணிக்கையிலானோரின் வருகையுடன், தினமும் சராசரியாக 1,500 பேர் ஸ்னோ வேர்ல்டை பார்வையிட வருகை தந்ததுடன், மூன்று ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர், இம்மாதம் வாடிக்கையாளர்களின் ஆர்வமும் அதிகரித்து எண்ணிக்கையும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 45 நிமிட சுழற்சியில் இயங்கும் நொறுக்கப்பட்ட பனிக்கட்டிகளை இவ்விடம் உள்ளடக்குவதுடன், குளிர்ச்சியான அனுபவத்தை வழங்கும் பொருட்டு சில மணித்தியாலங்களுக்கு ஒரு முறை புத்துயிர் ஊட்டப்படுகின்றது.

இக்காலகட்டத்தில், பனிக்கட்டி சார்ந்த செயற்பாடுகளில் பனிமூட்டமான இக்லூ, மின்னும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரம், கைவினை மூலம் உருவாக்கப்பட்ட பனி மனிதன், பாரிய மிட்டாய்க் கோல், நேரலை DJ, புகைப்படக்காரர்கள், விளையாட்டுகள் மற்றும் வேறு விடுமுறை வேடிக்கைகள் என்பனவும் நிறைந்துள்ளன.

பொதுமக்களின் நிகழ்வுகளுக்கு தனித்துவமான இடமாக விரிவுபடுத்தும் நீண்டகாலத் திட்டங்களுடன் ஸ்னோ வேர்ல்ட் டிசம்பர் 13 தொடக்கம் 31 வரை இயங்கும். பனி நிறைந்த உற்பத்திகளை தொடங்குதல், நிறுவனக் கூட்டங்கள் முதல் குழந்தைகளுக்கான விருந்துபசாரங்கள் மற்றும் திருமணங்கள் என எக்செல் வேர்ல்டில் மாத்திரம் கிடைக்கப்பெறும் பனி சார்ந்த நிகழ்வுகளைக் கொண்டாடுவதற்கான எல்லையற்ற அனுபவத்திற்கான வாய்ப்புகளையும் இவ்விடம் வழங்குகிறது.

## யாழ்ப்பாணத்தில் கால்பதித்துள்ள Alliance Finance



Alliance Finance Co. PLC (AFC) தனது கிளையை யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம் நகர்களில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தது. இந்நிகழ்வுகளில் பிராந்தியத் தலைவர் நிஷாந்த் செல்வரத்தினம் மற்றும் தங்கக்கடன் பிரிவின் தலைவர் சுரேந்திர ரொட்ரிகோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

AFCயின் புதிய கிளைகள் வாடிக்கையாளர்களுக்கு தங்கக் கடன்கள், குத்தகை மற்றும் நிலையான வைப்புகள் உட்பட தங்களுடைய நிதித் தேவைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு வழிவகுக்கின்றது. மேலும், இந்தப் புதிய கிளைகளைத் திறப்பதன் மூலம், அலையன்ஸ் ஃபைனான்ஸ், இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி, அதன் தொடு புள்ளிகளின் எண்ணிக்கையை 86 ஆக உயர்த்தியுள்ளது.

## இலங்கையில் கைஜீ பேட்டரிகளுக்கான விற்பனை மற்றும் விநியோகத்தைப் பொறுப்பேற்ற TVS




இரு சக்கர வண்டிகளுக்கான பேட்டரி உற்பத்தியின் முன்னணியாளரான கைஜீ (KAIJIE) இலங்கையில் தனது விநியோக வலையமைப்பை விஸ்தரிப்பதற்கும், சந்தையில் ஊடுருவுவதற்கும் உலகளாவிய ரீதியில் பாரிய நிறுவனமான TVS உடன் கைகோர்த்துள்ளது.

இந்த முயற்சியானது, லீடர் குழுமத்திற்கும், இலங்கையில் உள்ள தேசிய உற்பத்தியாளர்களுக்கும் மைல் கல்லாக அமைந்திருப்பதுடன், சர்வதேச வர்த்தகநாமமான TVS உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள தயாரிப்பின் மீது நம்பிக்கையைக் கொண்டிருப்பது சிறந்த அடையாளமாகும். TVS லங்காவின் சந்தைக்குப் பிறகான அணுகுமுறையின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, எங்கள் நுகர்வோருக்கு மிகச்சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்கி இலங்கை சந்தையில் மேலும் ஊடுருவுவதே இந்த மூலோபாய இணைப்பில் எங்களது நோக்கம் என லீடர் குழுமத்தின் தலைவர் கலாநிதி ஷ்ரியந்த குரே தெரிவித்தார்.

## ஏ.டி.எம். வலையமைப்பில் புதிய அமைவிடங்களை சேர்க்கும் Sarvodaya Development Finance




சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் (SDF) கிராமப்புற சமூகங்களுக்கு வலுவூட்டுவதற்காக 10 புதிய ஏ.டி.எம். அமைவிடங்களை அதன் நாடளாவிய வலையமைப்பில் அண்மையில் சேர்த்துள்ளதாக அறிவித்துள்ளது. புதிய, அதிநவீன ஏ.டி.எம். மையங்கள் கிராமப்புறங்களின் நிதியியல் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், உள்ளூர் சமூகங்களுக்கு திறமையான மற்றும் சௌகரியமான நிதியியல் சேவைகளை வழங்கவும் உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மிக சமீபத்தில், SDF ஆனது அம்பாறையில் இருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ள கெத்சிரிகம என்ற கிராமத்தில் ஏ.டி.எம். மையமொன்றை திறந்து வைத்துள்ளதுடன், அதனால் திட்டமிடப்பட்ட ஏ.டி.எம். வலையமைப்பில் மற்றொரு சௌகரியமான அணுகல் புள்ளியையும் சேர்த்துள்ளது.

LankaPay, சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் மற்றும் NDB வங்கி ஆகியவற்றின் வலுவூட்டலுடன் இணைந்து செயற்படும் 10 புதிய ஏ.டி.எம். மையங்கள், கிராமப் பொருளாதார மையங்களில் நிறுவப்பட்டு, உள்ளூர் மற்றும் சர்வதேச அட்டைகளை ஏற்கும் வசதியைக் கொண்டுள்ளன. ஏ.டி.எம். வலையமைப்பு விரிவாக்கத் திட்டம் கிராமப்புற சமூகங்களுக்கு வலுவூட்டுதல் மற்றும் தேவையான டிஜிட்டல் நிதியியல் உள்கட்டமைப்புடன் அவர்களை மேம்படுத்துதல், மக்களுக்கு நேரத்தைச் சேமிக்க உதவுதல் மற்றும் இடைத்தரகர்கள் இல்லாமல் அவர்கள் தமது பணம் மற்றும் நிதியியல் சேவைகளை உடனடியாக அணுகுதல் போன்ற SDF இன் முக்கிய பணி இலக்குக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலமாக இலங்கை முழுவதிலும் உள்ள மக்களுக்கு சமத்துவத்துடனான மேம்பாட்டை உறுதி செய்வதே நோக்கமாகும்.

## பண்டிகைக் காலத்தில் வெகுமதிகளை வழங்க Seylan Cards நடவடிக்கை



இலங்கையர்கள் பண்டிகைக் காலத்தை வரவேற்கத் தயாராகி வரும் நிலையில், அத்தியாவசியத் தேவைகளுக்கான அத்தியாவசிய அட்டையாக அமைந்துள்ள செலான் கார்ட்ஸ், இந்தப் பண்டிகைக் காலத்தில் மகிழ்ச்சியைச் சேர்ப்பதற்கு முன்வந்துள்ளது. அதற்காக 300க்கும் அதிகமான விற்பனைப் பங்காளர்களுடன் கைகோர்த்து, செலான் டெபிட் மற்றும் கிரெடிட் கார்ட் தாரர்களுக்கு 50% வரை விலைக் கழிவுகளை வழங்க முன்வந்துள்ளது.

இந்தப் பண்டிகைக் காலத்தில், அட்டை தாரர்களுக்கு ஆடைகள், பாதணிகள், அணிகலன்கள், மூக்குக் கண்ணாடிகள், ஒன்லைன் ஷொப்பிங் கட்டமைப்புகள், சுப்பர் மார்கெட்கள் மற்றும் பல பிரிவுகளில் தமக்கு பிடித்த விற்பனை நிலையங்களில் சலுகை அடிப்படையில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வசதியை செலான் கார்ட்ஸ் ஏற்படுத்தியுள்ளது.

## APIIT பட்டமளிப்பு விழா 2022



இலங்கையின் முதல் தர வெளிநாட்டு உயர் கல்வி வழங்குனரான ஆசிய பசிபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (APIIT Sri Lanka) வருடாந்த பட்டமளிப்பு விழா, இம்மாதம் 09 ஆம் திகதி BMICH பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை சிறப்பிப்பதற்காக இலங்கை நெஸ்லே நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான ஜேசன் அவன்சேனா வருகை தந்ததோடு, ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டபர்ட்ஷெயர் பல்கலைக்கழகத்தின் (Staffordshire University, UK) துணைவேந்தர் மற்றும் தலைமை நிர்வாகியான பேராசிரியர் மார்டின் ஜோன்ஸ் தனது வாழ்த்துகளை தெரிவித்திருந்தார்.

இப்பட்டமளிப்பு விழாவின்போது 456 மாணவர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டபர்ட்ஷெயர் பல்கலைக்கழகத்தின் வியாபார, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சட்டத்துறைகளில் பட்டம் மற்றும் முதுகலைப் பட்டம் வழங்கப்பெற்றது.

இந்நிகழ்வின் போது மென்பொருள் பொறியியல் (Software Engineering), கணினி நெட்வேர்க் மற்றும் பாதுகாப்பு (Computer Network and Security), கணினி அறிவியல் (Computer Science), சைபர் பாதுகாப்பு (Cyber Security), சர்வதேச வணிக முகாமைத்துவம் (International Business Management) மற்றும் சட்டம் (Law) போன்ற பட்டப்படிப்புகளுக்கான கௌரவ பட்டமளிக்கப்பட்டதோடு, வணிக நிர்வாகம் (MBA), வணிக கணினி அறிவியல் (MSc Computer Science – Business Computing), தொழில்நுட்ப முகாமைத்துவம் (MSc Technology Management) மற்றும் சர்வதேச வணிக சட்டம் (LLM – International Business Law) போன்ற பட்டப்படிப்புகளுக்கான முதுகலைப் பட்டமளிக்கப்பட்டது.

இவ்விழாவில் 80 மாணவர்கள் முதல் வகுப்பு கௌரவ பட்டங்களையும், 154 மாணவர்கள் இரண்டாம் வகுப்பு கௌரவ பட்டங்களையும், 46 மாணவர்கள் அதிசிறந்த முதுகலை பட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

## ரஷ்ய கூட்டமைப்பின் தேசிய முதலீட்டு கைத்தொழில் வங்கியுடன் கைகோர்க்கும் nok



ரஷ்யாவில் இருந்து இலங்கையிலுள்ள கணக்குகளுக்கு திறன்மிக்க மற்றும் சௌகரியமான வழியில் நிதிப் பரிமாற்றங்களைச் செய்வதற்கு புதுமையான வழியில் பணம் அனுப்பும் பொறிமுறையை எளிதாக்குவதற்காக, மக்கள் வங்கி, ரஷ்யாவில் உள்ள தேசிய முதலீட்டு கைத்தொழில் வங்கியுடன் அண்மையில் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டது.

இந்த ஏற்பாட்டின்படி, இலங்கையில் உள்ள பயனாளிகள், குறிப்பாக சேவை வழங்குநர்கள், ஏற்றுமதியாளர்கள் போன்றோர் நிதியை விரைவாகவும், செலவின் அடிப்படையில் திறன்மிக்க வழியிலும் பெற்றுக்கொள்ள முடியும். மிக முக்கியமாக, ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு தாங்கள் வருகை தருவதற்கு முன்னர் இலங்கையில் மக்கள் வங்கியில் உள்ள ஒரு கணக்கிற்கு, ரஷ்யாவில் உள்ள தேசிய முதலீட்டு தொழில்துறை வங்கியின் ஊடாக இடைநிலை வங்கியின் தொடர்பு இல்லாமல் பணத்தை அனுப்பி வைக்க முடியும். இலங்கைக்கு வந்ததும், சுற்றுலாப் பயணிகளுக்கு டெபிட் அட்டைகள் வழங்கப்படும், அவை அனுப்பப்பட்ட நிதியிலிருந்து தங்குதடையின்றி கொடுப்பனவுகளை செலுத்த பயன்படும்.

## இலங்கையில் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக நடத்தப்படும் சமூக பாதுகாப்பு விழிப்புணர்வு அமர்வுகள்



இலங்கையில் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான வலுவான நடவடிக்கைகளின் தேவை அதிகரித்து வரும் நிலையில், கிராமப்புறங்களில் உள்ள சமூகங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்களை சென்றடையவும் பல செயலாக்கங்கள் உள்ளன. இந்த செயலாக்கங்கள் பல்வேறு வடிவங்களை எடுத்து, பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவு, விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டுதலை வழங்குகின்றன.

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரசபையின் (NCPA) கூற்றுப்படி, 2021 ஆம் ஆண்டில் கொடுமை மற்றும் புறக்கணிப்பு முதல் பாலியல் வன்முறை வரையிலான 11,000 க்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளன. சமூகத்தில் பாதுகாப்பாக இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதன் மூலம் பின்தங்கிய சமூகங்களில் உள்ள குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

குழந்தைகளுக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனமான லீட்ஸ் மற்றும் ஹொங்கொங்கை தலைமையகமாக கொண்ட QI குழுமத்தின் சமூக முயற்சியான ரிதம் (RYTHM) அறவாரியம் ஆகியவற்றுக்கிடையேயான கூட்டுத்திட்டமான சமூகப்பாதுகாப்பு விழிப்புணர்வு முன்முயற்சி, குழந்தைகளுக்கு வெளிப்படும் அபாயத்தைக் குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தை துஷ்பிரயோகம். இலங்கையின் வடக்கில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவை வழங்குவதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## விந்தியா பெரேராவுக்கு தங்கப் பதக்க விருது




இலங்கை நாட்டின் அடையாளத்தை உலக அரங்குக்கு கொண்டு செல்லும், மாணிக்கக் கற்களை அரிந்து பட்டை தீட்டும் கலையின் முதன்மை நிறுவனமான வரையறுக்கப்பட்ட பிரிலியன்ட் கட்ஸ் தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் விந்தியா பெரேராவுக்கு தேசிய ஏற்றுமதிச் சபை (NCE) ஏற்பாடு செய்த 2022 ஆம் ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான விருது விழாவில் சிறந்த பெண் ஏற்றுமதியாளருக்கான தங்கப் பதக்க விருதை வென்றுள்ளார். மேலும், விந்தியா பெரேராவின் தலைமையிலான பிரிலியன்ட் கட்ஸ் தனியார் நிறுவனம் உள்ளிட்ட இரண்டு நிறுவனங்கள் இதே விருது விழாவில் இரட்டை வெங்கலப் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி விருது விழா கொழும்பு ஷங்-ரீலா ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. விந்தியா பெரேரா மற்றும் பிரிலியன்ட் கட்ஸ் நிறுவனம் இதற்கு முன்னரும் NCE, CNCI, FCCISL, SABEA ஜனாதிபதி விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளது.

# பொத்துவில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த கனகர் கிராம மக்களுக்கு காணி வழங்கல்

## அம்பாறையில் முதற்கட்டமாக முன்னெடுப்பு





(கனகராசா சரவணன்)

கடந்த இரண்டு வருடகாலமாக இருந்து வந்த யுத்தத்தினால் 35 வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்ந்துவந்த பொத்துவில் கனகர் கிராம மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கு 76 பேருக்கு காணி வழங்கும் பணி ஆரம்பித்து வைக்கப்படுவது அம்பாறை மாவட்டத்தில் ஓர் ஆரம்பப் புள்ளியாகும் - என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச செயலகத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த 76 பேருக்கு பொத்துவில் பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்ற காணி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த கனகர் கிராமத்தில் 165 குடும்பங்கள் வாழ்ந்துவந்துள்ளதாக வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டு வாழ்ந்து வந்துள்ள நிலையில், நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இந்த கிராம மக்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்து வந்துள்ளனர்.

யுத்தம் முடிந்து 10 வருடங்களாகியும் இதுவரை இந்த மக்கள் மீள்குடியேற முடியாத நிலையில், அவர்கள் தம்மை தமது சொந்த நிலத்தில் மீள்குடியேறுமாறு கடந்த 2 வருடங்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களை மீள்குடியேற்ற நான் உட்பட பலர் பல முயற்சிகளை எடுத்த நிலையில், நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான வீரசிங்க இந்த மக்களை குடியமர்த்த கூடுதலான பங்களிப்பை செய்துவந்தார்.

இந்நிலையில், குடியமர்த்துவதற்கான அனுமதி கிடைத்த நிலையில் கிராமசேவகர், காணி உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான நடவடிக்கையில் முதற்கட்டாக 76 பேரை இனங்கண்டு இவர்களுக்கு முதலில் ஒரு ஏக்கர் வயல் நிலமும் குடியிருக்க 20 பேர்ச் காணியும் வழங்க தீர்மானித்து, அதனை நேற்று முன்தினம் குழுக்கள் முறையில் காணி தேர்ந்தெடுக்கும் நடவடிக்கை ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த குழுக்கள் நிலையில் தேர்தெடுக்கப்பட்டவர்களின் காணிகள் நில அளவையாளர்களால் அளந்து அடையாளப்படுத்திய பின்னர் அவர்களுக்கான பத்திரம் வழங்கப்படும்.

எனவே, இந்த நீண்டகால பிரச்சினைக்கு முதலில் தீர்வு கண்டுள்ளோம். அத்தோடு நாட்டில் இருக்கின்ற மூவின மக்களும் இணைந்து வாழ்கின்ற அடிக்கல்லாக இந்த காணி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களான வீரசிங்க, முசாரப், காணி அமைச்சர் வன பரிபாலன சபை பிரதேச செயலாளர் உட்பட அனைவருக்கு நன்றிகள் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான வீரசிங்க மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹிங்குராங்கொடையில் ஆயுதங்களுடன் ஒருவர் கைது



(மீராவோடை நிருபர்)

பொலன்னறுவை மாவட்டம், ஹிங்குராங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் (14) ஆயுதங்களுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய விசேட அதிரடிப்படையினர் இணைந்து வீடொன்றை சுற்றிவளைத்தபோது அங்கிருந்து ஒரு மைக்ரோ பிஸ்டல், இரண்டு நாட்டுத் துப்பாக்கிகள், துப்பாக்கி ரவைகள், வாள் போன்ற ஆயுதங்களுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்து : காயங்களுடன் சாரதி வைத்தியசாலையில்!





(மாவடிப்பள்ளி நிருபர்)

நிந்தவூர், மாட்டுப்பளை பிரதான வீதியில் நேற்று (15) இடம்பெற்ற கார் விபத்தில் கார்ச் சாரதி பலத்த காயங்களுடன், ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாட்டுப்பளை பிரதான வீதியில் காரொன்று கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரத்தில் இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்று ஊர்ப்போடியார் வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் சசீந்திரன் (வயது 52) எனும் குடும்பஸ்தரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார். இவர் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனையிலிருந்து திருக்கோயில் நோக்கிச் சென்றுகொண்டிருந்த காரொன்று மரத்துடன் மோதியதில் காரை ஓட்டிச்சென்ற சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகி கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தார்.

அத்துடன், குறித்த கார் பலத்த சேதமடைந்துள்ளது. இது தொடர்பான விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## Graphic Designer

Oqnedr r hnm kpt Kheb shnmhm q oglb Cdr Hf mhmf
L hmhi t l 1 xd q Dwoddqdmbd (Ognsnr gno, Hkkt r sq snq, HmCdr Hf m)
@ookx v hsg bnl oqdgdmr hud qdr t l d v hsghm c xr ne sghr
cudqshr dl dms
SB O DRR (OUS) KSC
Mn 1 3, O mmhohsshx n c, A ss q l t Hk
v v v dwoqdr r oqmsk

## Assistant Director (Legal & Board Secretary)

Hhr shst shnme M shnm kSq mr oneqs Bnl l hr r hnm
dpt hqdl dmsr 9 Cdf qdd hm K v . Dmqnkkl dms ne @ssnqmdx s k v ne sgd Rt oqdl d Bnt qsne RqhK m mc /2 xd q ne Dwoddqhdmbd
@ookx 9 Bg hq m, M shnm kSq mr oneqs Bnl l hr r hnm, Mn 130, O q n c, Bnknl an /4

## Head of Branding and Communication

Bnl o mx 9 OL Dwdbt shud Rd qbg Ous Ksc
Dl Hhedr d qbg ol f bnl

## Medical Officers

Hhr shst shnme L hmhr sqx ne Sq mr oneqs mc Ghf gv xr
@ookx 9 Sgd Bg hq m, M shnm kSq mr oneqs L dchb kHhr shst sd, Mn o /, Ghf g Kdudk n c, Mt f df nc

## Head Teacher

Hhr shst shnme Khnm sd BnKkdf d, C l at Hk
Dl Hheqnghsg f dl r gq f l Hkbnl

## National Programme Officer / Project Co-ordinator

Hhr shst shnme HNL - TM L Hf q shnm
Bnmsq bs Sxod 9 Rodbh kRgnqs Sdq
@ookx 9 gssor 9 . r qhk m hnl hms b qdkq

## Assistant Managers (Up and Low country Regions)


Bnl o mx 9 Dkohshx Ok ms shnm OKB
dpt hqdl dmsr 9 L hmhi t l /4 xd q ne dwoddqhdmbd v hsg mv kdcf d hm sd mc q aadq
@ookx 9 dmdq kL m f dq- @cl hmhr sq shnm Kdf k, Dkohshx Ok ms shnm OKB, sg ekmnq @hs dmRodmbd Snv dq/o, U t wg HkRsqdds, Bnknl an /1
Dl Hhef qdr g m hs dmr odmbd k

# ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் 'நத்தார் ஒளி விழாவும் கரோல் கீதங்களும்' நிகழ்வு











ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் 2022ஆம் ஆண்டுக்கான 'நத்தார் ஒளி விழாவும் கரோல் கீதங்களும்' நிகழ்வு 'தமிழன்' ஊடக அனுசரணையில் கடந்த டிசம்பர் 7ஆம் திகதி கல்லூரி முதல்வர் ஆ.ரொபர்ட் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹட்டன் திருச்சிலுவை ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை நியூமன் பீரீஸ் அடிகளார் கலந்துகொண்டதுடன், சிறப்பு அதிதிகளாக அருட்தந்தை தேவதாசனும் போதகர் மணியம் ஜேசுதாசனும் கலந்து கொண்டனர். மேலும் உதவி கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

















## போடியார் புலம்பல்!



விரைந்து இனப்பிரச்சினைய தீர்க்க முடிவுகளை எடுக்க சொல்லி எல்லா கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி சொல்லியிருக்கார் எலுவா..? அவரிட கதய பார்த்தா அவர் ஒதுங்கிநின்று கட்சி தலைவர்களிட்ட பந்த குடுத்த மாதிரியான பேய்காட்டல் போல எலுவா இந்தக் கத இருக்கு.

அதற்கு இடையில இப்பவே வரிந்து கட்டிக்கொண்டு இனவாதி உதயகம்மன்வெல எம்.பி. 52 நாளைக்குள இனப்பிரச்சினக்கு தீர்வு என்பது முட்டாள்தனமாம் எண்டுறாரு.. அடே 74 வருடம் இந்த பிரச்சின இருக்குறது தெரியாம கத்தாதடாம்பி.!

# அட்டாளைச்சேனையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

## பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோரும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். ரிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் டெங்கு ஒழிப்பு ஒருங்கிணைப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய் தடுப்புப் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்டகுறித்த கூட்டத்தில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம். இஸ்மாயில், அட்டாளைச்சேனை பெரிய ஜும்மா பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஜுனைதீன், ஏனைய மத நிறுவனங்களின் தலைவர்கள், பிரதேச சபை செயலாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளும் சங்கங்களின் சார் பான பிரதிநிதிகளும் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

நாளை சனிக்கிழமை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் டெங்கு அதிகமாக பரவக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற பிரதேசங்களில் பாரிய சிரமதான நடவடிக்கைகளும் கள பரிசோதனையும் இடம்பெறவிருப்பதனால் சகலரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பொதுமக்களுக்கும், பொது அமைப்புகளுக்கும் பணிப்பாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த நிகழ்வு அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் போதைப்பொருளைத் தேடி பாடசாலை மாணவர்களிடம் சோதனை




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் போதைப்பொருளை தடுப்பதற்காக பாடசாலை மாணவர்களை சோதனையிடும் நடவடிக்கையை நேற்று (15) சென். மைக்கல் ஆண்கள் பாடசாலையில் மோப்பநாய்கள் சகிதம் பொலிஸார் முன்னெடுத்தனர்.

நாட்டில் மாணவர்களுக்கிடையே போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதையடுத்து அதனைத் தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களை சோதனையிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ராஜித ஸ்ரீதமிந்தவின் ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.கே.பி.ஹெட்டியாராச்சி தலைமையில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு மைக்கல் தேசிய ஆண்கள் பாடசாலை வாசலில் மோப்பநாய்கள் சகிதம் பாடசாலைக்குள் உள்நுழையும் மாணவர்களின் பைகள் சோதனையிடப்பட்டன.

இந்த சோதனை நடவடிக்கை தொடர்ந்து ஏனைய பாடசாலைகளில் இடம்பெறும் எனவும் மாணவர்கள், பெற்றோர்கள், போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாவிப்பவர்கள் தொடர்பாக அறிந்திருந்தால் உடனடியாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறியத்தருமாறும் போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பாக விழிப்பாக இருக்குமாறும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 'தண்ணீருக்குள் எத்தனை கண்கள்' நூல் வெளியீடு




(மருதமுனை, திராய்க்கேணி நிருபர்கள்)

கவிஞர் சோலைக்கிளியின் 'தண்ணீருக்குள் எத்தனை கண்கள்' நூல் வெளியீடு நாளை சனிக் கிழமை (17) கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி யில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அருட்தந்தை அன்பு ராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வைத் தொடங்கி வைக்கவுள்ளார் மக்கத்தார் ஏ.மஜீத். வரவேற் புரையை கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் நிகழ்த்தவுள்ளார்.

இணைத் தலைமைகளாக செ.யோகராசா, மன்சூர் ஏ.காதர் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். அருட்தந்தை அன்பு ராசா, யூ.எல்.ஏ.அஸீஸ், ஜவாட் அப்துல் றஸாக் ஆகியோர் சமர்ப்பணப் பிரதிகளை கையளிக்கவுள்ளனர். சிறப்புரைகளை றமீஸ் அப்துல்லா, றமீஸ் அபூபக்கர், ரஊப் ஹக்கீம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பசீர் அப்துல் கையூம், ஜே.வஹாப்தீன் ஆகியோர் நிகழ்வைத் தொகுத்து வழங்கவுள்ளனர்.

# உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் சந்தை - கண்காட்சி திருமலையில்





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் தொடர்பிலான சந்தை மற்றும் கண்காட்சி இடம்பெற்றன.

குறித்த நிகழ்வானது நேற்று (15) தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டு தலுக்கிணங்க முள்ளிப்பொத்தானை சந்தை கட்டடத்தொகுதிக்கு அருகாமையில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தனால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதில் உள்ளூர் உற்பத்திகளான கைப்பணிப் பொருட்கள், பாரம்பரிய உற்பத்திப் பொருட்கள் என பலதும் இதன்போது சந்தைப்படுத்தப்பட்டன.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இக் கண்காட்சியும் சந்தைப்படுத்தலும் இடம்பெற்றுள்ளன.

குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர உட்பட பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலக சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்றில் கம்பியை அறுத்து தெரு மின்குமிழ்களைத் திருடிய நாசகாரச் செயல்!




(மாளிகைக்காடு நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட அம்பாறை பிரதான வீதியில் பள்ளி குடியிருப்புக் கும் ஆலிம் நகருக்கும் இடைப்பட்ட இடங்களில் பொருத்தப்பட்ட சூரிய சக்தி மின்குமிழ் கம்பத்தை அறுத்து மின்குமிழ்களை இனந்தெரியாதோர் திருடி சென்றுள்ளனர். சம்பவம் அறிந்து குறித்த இடத்திற்கு வருகைதந்த அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாஸிக் சம்பவம் தொடர்பில் தனது கவலையை வெளியிட்டார்.

சம்பவம் தொடர்பில் பேசிய அவர், அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட அம்பாறை பிரதான வீதியில் பள்ளி குடியிருப்புக்கும் ஆலிம் நகருக்கும் இடைப்பட்ட இடங்களில் யானைக் கூட்டங்களின் வருகையும், பிரயாணம் செய்கின்ற பொதுமக்களின் அசௌகரியமும், இரவு நேரங்களில் வேலை செய்கின்ற விவசாயிகளின் அத்தியாவசிய தேவையும் கருதி பெறுமதி வாய்ந்த சூரிய சக்தியில் இயங்குகின்ற மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

நேற்று அதிகாலை பெரிய இரும்புக் குழாயினை அறுத்து சாய்த்து விட்டு அதில் பொருத்தப்பட்டிருந்த சூரிய சக்தி மின் விளக்கை திருடிக் கொண்டு சென்றுள்ளனர். தயவுசெய்து இவ்வாறான அநாகரிகமான செயற்பாட்டின் மூலமாக தங்களுக்கும் தங்களைச் சூழ உள்ளவர்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதை விட்டு தவிர்ந்திருக்குமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வகையான தொடர் செயற்பாடுகள் நீடிக்குமாக இருந்தால் இவ்வகையான அநாகரிகமான செயற்பாடுகளுக்கு தண்டனை பெற்றுத்தரும் வகையில் பிரதேச சபையும் பொதுமக்களும் செயற்படுவார்கள் என்பதனை மன வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன். இறுதியில் இவ்வகையான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நாகரீகமான ஆயிரம் வழிகள் திறந்திருக்கின்றன. சற்று மனசாட்சிக்கு இடம்கொடுத்து பொதுச் சொத்துக்களை அமானிதங்களாக பாதுகாக்க ஒவ்வொருவரும் மனதில் கொள்ளுமாறு வினயமாய் வேண்டிக்கொள்கிறேன் என்றார்.

# கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினராக மனோரஞ்சினி பதவியேற்பு

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பேரின்பராஜா மனோரஞ்சினி, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் முன்னிலையில் தனது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.


கல்முனை மாநகர சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினராக பதவி வகித்துவந்த புவனேஸ்வரி விநாயகமூர்த்தி காலமானதையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கே பாண்டிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இவர்m அக்கட்சியினால் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

இவரது நியமனம் தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 02.12.2022ஆம் திகதியன்று தெரிவத்தாட்சி அதிகாரி கசன் சிறிநாத் அத்தநாயக்கவினால் வெளியிடப்பட்டிருந்தது.

இப்பதவியேற்பு நிகழ்வில் மாநகர சபையின் மற்றொரு ஐ.தே.க. உறுப்பினரான நடராஜா நந்தினி மற்றும் புதிய உறுப்பினரின் குடும்ப உறவினர்களும் பங்கேற்றிருந்தனர்.



# ஆழ்கடலுக்குச் சென்று மாயமான மீனவர்கள் மூவரில் ஒருவர் மீட்பு!



(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து கடந்த 2ஆம் திகதி ஆழ்கடலுக்குச் சென்ற மூன்று மீனவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் (14) மீட்கப்பட்டுள்ளதாக துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் ஹம்பாந்தோட்டை கடற்பரப்பில் மீன்களை பிடித்துவிட்டு 9ஆம் திகதி ஊர் திரும்பும்போது கடல் கொந்தழிப்பு காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானார்கள்.

இவ்விபத்தில் சிக்கிய என்.எம்.றியாஸ், எம்.எஸ்.எம்.றியாஸ் ஆகிய மீனவர்களின் தகவல்கள் இதுவரை கிடைக்காத நிலையில், அவர்களுடன் சென்ற ஆர்.பௌசர் எனும் மீனவர் மாத்திரம் தெய்வாதீனமாக உயிர் தப்பி நேற்று முன்தினம் (14) ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு ஏனைய மீனவர்களின் உதவியுடன் வந்தடைந்துள்ளார்.

# தூய அன்னை சாரதாதேவியின் 170ஆவது ஜனனதின விழா





(கல்லடி நிருபர்)

தூய அன்னை சாரதாதேவி அம்மையாரின் 170ஆவது ஜெயந்தி தின விழா நேற்று (15) மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் இல்லப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவாந்தாஜீ மகராஜ் தலைமையில் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

ஜனன தின விழாவின் ஆரம்ப நிகழ்வாக, அதிகாலையில் மங்கள ஆராத்தியுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து வேத மந்திரங்கள், திருப் பள்ளியெழுச்சி, பக்திப் பாடல்கள், கோயில்வலம், கொடியேற்றம், பூஜை ஆரம்பம், பஜனைப் பாடல் கள், ஹோமம், சொற்பொழிவு, சிறப்பு ஆரத்தி ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை, நேற்று முன்தினம் (14) மாலை 4.30 மணிக்கு அன்னை சாரதா தேவியாரின் திருவுருவம் தாங்கிய ரத பவனி கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் மற்றும் பேச்சியம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து, பழைய கல்முனை வீதி வழியாக- கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்தை அடைந்து, காளிகோவிலூடாக மீண்டும் ஸ்ரீ இராமகிருஷ்ண சிறுவர் இல்லத்தை வந்தடைந்தது.

# சுரண்டப்பட்ட பணம் எங்கே? மட்டு. நகரில் துண்டுப்பிரசுரங்கள்!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு நகர்ப் பகுதிகளில் நேற்று முன்தினம் (14) "சுரண்டப்பட்ட பணம் எங்கே" எனத் தலைப்பிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் சில இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

சமூக செயற்பாட்டாளர்களின் படத்தைப் பிரசுரித்து இத்துண்டுப்பிரசுரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

TCC ஈழத்தமிழர்கள் மேலைத்தேய நாடுகளிலிருந்து மாவீரர் உறவினர்களுக்கு உழைத்து அனுப்பிய பணத்தை என்ன செய்தாய்?, மாவீரர்களின் மற்றும் அவர்களது குடும்பங்களின் சாபம் உன்னை சும்மா விடுமா போன்ற வாசகங்கள் அதில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2023இல் கூடுதலாக....

## 64,000 ஹெச்2பி விசாக்களை வழங்க அமெரிக்கா முடிவு

2023ஆம் ஆண்டு கூடுதலாக 64,716 ஹெச்2பி விசாக்களை (நுழைவு - இசைவு) வழங்க அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.

ஹெ2பி என்பது அமெரிக்காவில் தங்கி பணியாற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த உடல் உழைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதாகும். இந்தளவுக்கு அதிகமாக ஹெச்2பி விசாக்களை வழங்க அமெரிக்கா முடிவெடுத்திருப்பது இதுவே முதன்முறையாகும். எனினும், இந்த விசா முடிவு தற்காலிகமானது என்றும் அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அமெரிக்காவில் உடல் உழைப்பு சார்ந்த தொழில்கள், சேவைகளில் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கவுள்ளன.

# புலம்பெயர்ந்தோர் கடத்தப்படும் அவலம்

**வெவ்வேறு இடங்களில் அலைய வைத்து பிணைத்தொகை கேட்பதாக தகவல்**

மெக்சிக்கோவிலிருந்து எல்பாசோவிற்கு, ரியோ கிராண்டேவைக் கடந்து சென்ற புலம்பெயர்ந்தவர்களில் பலர் கடத்தப்பட்டுள்ளனர்.

இரண்டு மூன்று முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களை மீட்கும் பிணைத் தொகை கோரப்பட்டது. போதைப்பொருள் கடத்தல், வன்முறை மற்றும் பலவீனமான சட்டவிதிகள் நிறைந்த பகுதிகளைக் கடந்து மெக்சிக்கோ முழுவதும் பயணிக்கும்போது, புலம்பெயர்ந்தோர் எதிர்கொள்ளும் ஆபத்துகளை இந்த கடத்தல்கள் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன.

கடத்தப்பட்ட புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்காவில் சிறந்த பொருளாதார வாய்ப்புகளைப் பெறுவதற்காக தங்கள் தாயகத்தை விட்டு வெளியேறிவர்கள் எனத் தெரியவருகிறது.



# உலக செய்திகள்

## ஈரானில் 21 பேருக்கு மரணதண்டனை



ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட 21 பேருக்கு அரசு மரணதண்டனையை விதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஈரானில் செப்டெம்பர் மாதம் ஹிஜாப் சரியாக அணியாத இளம்பெண் மாஷா அமினிக்கு எதிராக தொடர் போராட்டம் நடந்து வருகிறது. இதற்கு எதிராக போராட்டம் நடத்தியவர்களையும் ஈரானிய படைகள் கண்மூடித்தனமாக தாக்கி வருகின்றனர்.

இத்தாக்குதல்களில் 300இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன் 15,000 அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வாரத்தில் இரு இளைஞர்களை ஈரானிய அரசு பொது வெளியில் தூக்கிலிட்டது. இதற்கு கண்டனம் தெரிவித்து பொதுமக்கள் வீதிகளில் இறங்கியுள்ள நிலையில், அங்கு 21 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சொந்த மக்களுக்கு எதிராக ஈரான் பயப்படுகிறது என கூறியிருக்கும் அமெரிக்கா, ஈரானின் கொடூரமான செயலை வலுவாக எதிர்ப்பதாக தெரிவித்துள்ளது.

**400 பேருக்கு 10 ஆண்டுகள் சிறை**

இதேவேளை, ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட சுமார் 400 போராட்டக்காரர்களுக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. தலைமையகத்தில் மகாத்மா காந்தி சிலை திறப்பு



ஐ.நா. தலைமையகத்தில் முதன்முறையாக காந்தி சிலை திறக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ள நிலையில், நேற்று ஐ.நா. தலைமையகத்தில் மகாத்மா காந்தியின் மார்பளவு சிலை திறக்கப்பட்டது.

அமெரிக்க சென்றுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்ஷங்கரும், அன்டோனியோ குட்டரெஸும் இணைந்து இந்த சிலையை திறந்துவைத்தனர். ஐ.நா. தலைமையகப் புல்வெளி பகுதியில், 1961ஆம் ஆண்டுமுதல் 1989ஆம் ஆண்டுவரை ஜேர்மனியை பிரித்த பேர்லின் சுவரின் பகுதிகள், தென்னாபிரிக்கா பரிசளித்த நெல்சன் மண்டேலாவின் சிலை உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

## உக்ரைனின் கீவ் நகர் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்



உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய தொடர் ட்ரோன் தாக்குதலில் கீவ் நகரில் அரச அலுவலகங்கள் உட்பட 5 கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இப்போர் இன்று 9 மாதங்களைக் கடந்தும் நீடிக்கிறது.

உக்ரைன் மீதான தாக்குதலில் ரஷ்யா சமீப காலமாக ரொக்கெட், ஏவுகணைகள், வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், தலைநகர் கீவில் ரஷ்யப் படையினர் நடத்திய தாக்குதலில் அரச அலுவலகங்கள் உட்பட 5 கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

இது குறித்து அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவிக்கையில், ரஷ்ய இராணுவத்தினர் ஈரானில் தயாரிக்கப்பட்ட 13 ட்ரோன்களைக்கொண்டு இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் - என்றார்.

இந்தத் தாக்குதலில் அசோவ் கடலின் கிழக்கு கடற்கரை பகுதியிலிருந்து ரஷ்ய வீரர்கள் 10 ஆளில்லா ஷகீத் டிரோன்களைக்கொண்டு தாக்குதல் நடத்தியிருப்பதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது. இதில் ஷெவ்சென்கிவ்ஸ்கி மாவட்டத்தில் அரச அலுவலகங்கள் உட்பட 5 கட்டடங்களை ட்ரோன்கள் சேதப்படுத்தியன. உயிர்ச்சேதம் குறித்த எந்தத் தகவல்களும் உடனடியாக வெளியாகவில்லை.

**உக்ரைனுக்கு அதி நவீன வான்பாதுகாப்பு அமைப்புகள்**

உக்ரைனுக்கு அதிநவீன வான்பாதுகாப்பு அமைப்புகளை அனுப்ப அமெரிக்கா பரிசீலித்து வருகிறது. இந்த பாதுகாப்பு அமைப்புகள் கிடைக்கப்பெற்றால், உக்ரைனின் எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் ரஷ்ய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களுக்கெதிராக உக்ரைனால் தற்காத்துக்கொள்ள முடியும்.

இதற்கிடையே, ரஷ்யாவின் தாக்குதல் மற்றும் உறைபனியால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனியர்களுக்கு உதவ, அதன் நட்பு நாடுகள் ஒரு பில்லியன் யூரோக்களை வழங்கவும் முன்வந்துள்ளன.

## வங்கக் கடலில் உருவாக்கும் புயல் இலங்கையை ஒட்டி கரையை கடக்கும்

**இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவிப்பு**

தென்கிழக்கு அரபிக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வடமேற்கில் நகர்ந்து இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது.

மேலும் இன்று வங்கக் கடலில் உருவாகும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி புயலாக மாற வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அந்த புயல் இலங்கையை ஒட்டி தமிழக மாவட்டங்களின் கரையை கடக்கும் எனவும், கரையை கடந்த பின்னர் உள்மாவட்டங்கள் வழியாக அரபிக் கடல் செல்லும் எனவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## கொங்கோவில் மண்சரிவில் சிக்கி 141 பேர் உயிரிழப்பு


கொங்கோவில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 141 ஆக உயர்ந்துள்ள நிலையில், உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் Kinshasa உள்ளிட்ட பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. போக்குவரத்து சேவைகள் முற்றாக முடங்கியுள்ளன. மழை வெள்ளத்தில் வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டதுடன், பல வீடுகள் இடிந்து விழுந்துள்ளன.

# FIFA WORLD CUP - 2022



## முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த மொரோக்கோவின் போராட்டம் வீணானது



**வரிசையாக இரண்டாவது இறுதிப்போட்டியில் நடப்பு சம்பியன் பிரான்ஸ்**

22ஆவது பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடரில் பரபரப்பாக நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் தொடர் ஆரம்பம்முதல் ஆதிக்கம் செலுத்திவந்த ஆபிரிக்க அணியான மொரோக்கோவை அடக்கி நடப்பு சம்பியன் பிரான்ஸ் மீண்டும் வரிசையாக இரண்டாவது இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

நேற்று நள்ளிவு 12.30 மணிக்கு டோஹாவின் அல்-பைத் மைதானத்தில் நடைபெற்ற 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான பிரான்ஸ் அணியானது, பெல்ஜியம், ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த மொரோக்கோ அணியை எதிர்கொண்டது. உலகக்கிண்ண வரலாற்றில் முதன்முறையாக அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ள மொரோக்கோ அணி மீதும், நடப்பு சம்பியனான பிரான்ஸ் மீதும் சமமான எதிர்பார்ப்பு நிலவியது.

அந்த பரபரப்புக்கு பஞ்சம் வைக்காமல், ஆட்டத்தின் 5ஆவது நிமிடமே பிரான்ஸ் வீரர் தியோ ஹெர்னாண்டஸ் முதல் கோல் அடித்து அசத்தினார். ஆரம்பமே பிரான்ஸ் தனது தாக்குதலை தொடங்க, மொரோக்கோவால் இதை சமாளிக்க முடியவில்லை. சொல்லப் போனால், நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் மொரோக்கோ எதிரணியின் கோலை விட்டுக் கொடுத்தது இதுவே முதல்முறை.

இதுவரை எந்த அணியும் நடப்பு தொடரில் மொரோக்கோவுக்கு எதிராக கோல் அடிக்க வில்லை. அந்தளவுக்கு பிரான்ஸ் அதிரடியாக ஆரம்பித்தது.

டிபன்ஸ் பலமிக்க மொரோக்கோ, பிரான்ஸின் அதிரடித் தாக்குதல் பாணியிலிருந்து மீள பல முயற்சிகளை எடுத்தது. ஆனால், எதுவும் கைகொடுக்கவில்லை. மாறாக, ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் கோலோ முவானி கோல் அடிக்க, அந்த அணி 2 -0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இறுதிவரையும் ஏராளமான கோல் அடிக்கும் வாய்ப்புகள் மொரோக்கோ அணிக்கு கிடைத்தும் அதனை பிரான்ஸ் வீரர்கள் கச்சிதமாக தடுத்தனர். இறுதியில் மொரோக்கோ தோல்வியைத் தழுவ, நடப்பு சம்பியனான பிரான்ஸ் அணி மீண்டும் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

பீபா உலகக்கிண்ணத் தொடரின் கடைசி ஏழு சீசன்களில் (1998, 2006, 2018 மற்றும் 2022) பிரான்ஸ் நான்கு முறை இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது. அந்தவகையில் 2022 பீபா உலகக்கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவை எதிர்கொள்ளவுள்ளது பிரான்ஸ்.



நடப்பு பீபா உலகக்கிண்ணத் தொடரில் பல முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி கொடுத்து, உலகக்கிண்ண வரலாற்றில் முதல் ஆபிரிக்க, அரேபிய அணியாக அரையிறுதிக்குத் தகுதிபெற்ற மொரோக்கோ, பிரான்ஸிடம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தங்களது ரசிகர்களுக்கு நன்றி செலுத்தினர்.

## மொரோக்கோவின் தோல்வியால் பிரான்ஸில் கலவரம்



மொரோக்கோவுடனான அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் அணி வெற்றிபெற்றதையடுத்து திரளான ரசிகர்கள் வீதிகளில் திரண்ட நிலையில் கலகத்தடுப்பு பொலிஸார் களமிறக்கப்பட்டனர்.

நேற்று நள்ளிரவு நடந்த அரையிறுதி ஆட்டத்தில் மொரோக்கோ வெற்றிவாய்ப்பை இழந்த நிலையில், பிரான்ஸ் தொடர்ந்து இரண்டாவது முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இந்நிலையில், பிரான்ஸ் தலைநகர் பரிஸ் மற்றும் மாண்ட்பெல்லியர் பகுதிகளில் திரண்ட ஆயிரக்கணக்கான ரசிகர்கள் இரு அணிக்கு ஆதரவாகவும் முழக்கமிட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி, பிரான்ஸில் மொரோக்கோ மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் கலவரம் வெடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மாண்ட்பெல்லியர் பகுதியில் கலகத் தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், அங்காடிகளை சேதப்படுத்தியும் வாகனங்களுக்கு நெருப்பு வைத்தும் ரசிகர்கள் தங்கள் ஆத்திரத்தை தீர்த்துள்ளனர்.

பிரான்ஸ் மற்றும் மொரோக்கோ ஆட்டம் ஆரம்பிக்க முன்னரே, நாடு முழுவதும் சுமார் 10,000 பொலிஸார் குவிக்கப்பட்டதாகவும், தலைநகர் பரிஸில் மட்டும் 5,000 பொலிஸார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தகவல் வெளியானது. ஒரு உள்நாட்டுக் கலகத்திற்கான அனைத்து தயாரிப்புகளும் நடத்தப்பட்டுள்ளதென பரிஸ் நகரவாசி ஒருவர் அச்சத்துடன் தெரிவித்திருந்தார்.

பிரான்ஸில் மொத்தம் 1.5 மில்லியன் மொரோக்கோ மக்கள் வசிக்கின்றனர். அதுமட்டுமின்றி, மொரோக்கோவுடனான பிரான்ஸின் காலனித்துவ வரலாறு இன்னும் அதிகமான அசம்பாவிதங்களை ஏற்படுத்தும் என்றே கூறப்படுகிறது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## விரைவாக கோல் அடித்த மூன்றாவது மாற்று வீரர்



மொரோக்கோவிற்கு எதிரான அரையிறுதியின் 79ஆவது நிமிடத்தில் கோல் அடித்த பிரான்ஸ் வீரர் ராண்டால் கோலோ முவானி மாற்று வீரராகக் களமிறங்கி விரைவாகக் கோல் அடித்த வீரர் என்ற புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டி உள்ளார். பிரான்ஸுக்காக மூன்றாது போட்டியில் விளையாடிய முவானி அடித்த முதல் கோல் இதுவாகும்.

பதில் வீரராகக் களமிறங்கிய முவானி, 44 விநாடிகளில் கோல் அடித்தார். 2002ல் ரிச்சர்ட் மோரல்ஸ் (16 விநாடிகள்), 1998இல் எபே சாண்ட் (26 விநாடிகள்) ஆகிய இருவரும் முதல் இரண்டு இடங்களில் உள்ளனர்.

நான்டெஸ் யூத் அகாடமியில் பட்டம் பெற்ற 24 வயதான கோலோ முவானி தற்போது ஜேர்மனியின் பன்டெஸ்லிகாவிலுள்ள ஐன்ட்ராக்ட் ஃபிராங்ஃபர்ட்டுக்காக விளையாடி வருகிறார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7